காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

17.1.70

விலை 20 காசு

28-12-69

கனவு!

—துறவி

தனிமையிலே உடல்கிடந்த போதும், நெஞ்சம்
தான்தோன்றித் தனமாகப் பயணம் செய்து
கனவென்னும் பலஊரில் தங்கி நித்தம்
காலவழி அனுபவத்தைச் சேர்த்து வைக்கும்
அனல்துயர இதயத்தில் தென்ற லாக
அகப்பட்டுச் சுகம்கொடுக்கும் கனவு, எண்ணம்
இனிமையிலே மெருகேறி வாழ்வில் தோன்றும்
இருட்டுக்கு ஒளிநல்கும் கனவு ஒனறே!

இடுகாட்டுப் புதைகுழியில் மனித வாழ்வு
இறுதிவரி யாய்முடியும்; அதுவரைக்கும்
முடிவற்றுத் தொடருகின்ற ஊசல் வாழ்வின்
முட்பாதை யாத்திரையில் இதயம் சோர்ந்து
நெடுமூச்சு விட்டபடி நெட்டு யிர்த்தால்
நெஞ்சத்தைத் தேற்றுமிந்தக் கனவு, மீண்டும்
நடப்பதற்கு உணர்விலென்றும் ஆற்ற லென்ற
நெருப்புதனை ஏற்றுகின்ற பந்த மாகும்!

விதிஇயக்கும் காலவழி ஓடி எங்கோ
வாழ்க்கையினை முடிக்கின்ற மனிதர் எல்லாம்
நிதம்இந்த ஞாலவழி நடக்கும் போது
நெஞ்சொடிக்கும் துயரத்தால் தடுக்கி வீழின்
அதன்துயரம் இதயத்தை முற்று மாக
அழித்துவைத்து முடமாக்கி வைத்தி டாமல்
புதுவலிமை தரும்,மீண்டும் பயணம் போகப்
புலன்ஐந்தை இக்கனவே இயக்கி வைக்கும்

கனவுவழி செல்கின்ற நெஞ்சில் மூண்டு
கனலுகின்ற ஆசைகளே இயக்கி வைக்கும்
அனுராகக் கனவுகளோ மனத்தை நீண்ட
ஆனந்த மலைமுகட்டில் ஏற வைக்கும்
மனஉணர்வில் இருள்சூழ துன்ப மென்ற
மயானத்தில் புதைத்தாலும் புதைக்கும்; யாவும்
கனவென்ற ஆற்றலுக்குள் அடங்கும், வாழ்வே
கனவென்ற இயக்கத்தின் துடிப்புத் தானே!

மருட்சிமனம் காணுகின்ற கனவு நெஞ்சை
முடமாக்கும், விரக்தியிலே தள்ளும், வாழ்க்கை
விருப்பத்தை விரட்டிவிட்டுத் துயர மென்ற
விளைச்சலுக்கு விதைதூவும்; நடுங்கு கின்ற
கரம்வரையும் ஓவியத்தில் எப்ப டித்தான்
கண்மயங்கும் கவின் இருக்கும்? வன்மை யோடு
இருப்பதற்கு நமதுமனம் நித்தம் நித்தம்
எழுகின்ற கனவுகளில் அழகு வேண்டும்

முகில்கனவு வான்வில்லாய் மயக்கும், வண்டு
முத்தமிடும் மலர்க்கனவு மணமாய் வீசும்.
பகற்கனவு செங்கதிராய் ஒளிரும்; ஆற்றுப்
புனல்கனவு குமிழிகளாய், எரியும் போது
புகைக்கனவு காணுகின்ற விளக்க ணைத்துப்
படுக்கையறை இருட்டினிலே காணு கின்ற
சுகக்கனவு குழந்தையெனப் பிறந்து காதல்
சுவையளக்கும் பொற்கனவாய் மடியில் வீழும்!

பிரபஞ்ச வாழ்க்கைஒரு கனவே என்று
பழிக்கின்றான் வேதாந்தி; விதவை யாக
இருக்கின்ற பெண்ணொருத்தி காதல் கூட
எனக்கினிமேல் கனவென்றே பொருமு கின்றாள்
கருங்கூந்தல் வெளுத்தஒரு கிழவி, மேனி
கவினெல்லாம் கனவென்றே இகழு கின்றாள்
பெருஞ்செல்வம் பெற்றிழந்த வறிஞன் செல்வ
போகமெல்லாம் கனவென்றே விம்மு கின்றான்!

சலிப்புற்ற நெஞ்சோடு வாழ்வை நோக்கிச்
சஞ்சலத்தில் தடுமாறும் மனங்க ளுக்கு
நிலையற்ற கனவுகளின் தோற்ற மாக
நிகழுகின்ற புதுமையெல்லாம் தெரியும், கொஞ்சம்
கலைஉணர்வு மிளிருகின்ற விதமாய் நெஞ்சைக்
கோபுரம்போல் நிமிரவைத்தால் கனவு போலத்
துலங்குகின்ற இவ்வுலகின் வடிவ மெல்லாம்
தெய்வீக பேரெழிலாய் நமக்குத் தோன்றும்!

காதலிக்கும் இதயத்தில் இதழ்ப திக்கும்
கட்டிலறை துயில்பற்றிக் கனவு, பக்தி
சோதனையில் ஒன்றிவிட்ட பக்தன் நெஞ்சில்
செழிப்பதுவோ பரம்பொருளின் கனவு, ஏழ்மை
வேதனையில் தத்தளிக்கும் மனித ருக்கு
வளர்வதுவோ செல்வத்தின் கனவு, இந்த
மேதினியில் தெரிகின்ற காட்சி யெல்லாம்
மனிதநெஞ்சை மயக்குகின்ற கனவே யாகும்!

சித்திரமோ தூரிகையின் கனவு! பாறை
சிற்பங்கள் சிற்றுளியின் கனவு! ஆழி
நித்திலங்கள் சிப்பிகளின் கனவு! வீணை
நரம்புகளில் எழும்கனவோ நாதம்! செந்நெல்
கொத்துகளோ நிலமடந்தை கனவு! மோகக்
குளிர்நிலவோ இருள்வானக் கனவு! நெஞ்சம்
சித்திரிக்கும் கனவுகளை யேநான் என்றும்
சிங்காரக் கவிதைகளாய் எழுதி வைப்பேன்!

விற்பனையாளர்களுக்கு

இந்த ஆண்டுப் பொங்கல் மலரில் அறிஞர் அண்ணா அவர்களின் எண்ணக்குவியலாம் ''இன்ப ஒளி''யும் மற்றும் தமிழக அமைச்சர்கள், கழக முன்னணியினர் ஆகியோரின் கதை, கட்டுரை, கவிதைகளுடனும், வழக்கம் போல் வெளிவருகிறது. விலை ரூ. 1—50.

தங்களுக்குத் தேவையான மலர் எவ்வளவு என்பதை 31—12—69க்குள் தெரிவிப்பதுடன், தேவையான மலருக்குரிய தொகை முழுவதையும் 3—1—70க்குள் இங்கே கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். அதோடு டிசம்பர் மாத பட்டியல் பாக்கி முழுவதையும் உடன் அனுப்பவேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

பாக்கி முழுவதும் அனுப்பாதவர்களுக்கு மலர் கண்டிப்பாக அனுப்பப்படமாட்டாது.

அன்னை

அன்னையின் இதயமே குழந்தையின் பள்ளிக்கூடம்.

—பீச்சர்

உலகம் அனைத்தையும் ஒரு தட்டிலும், என் தாயை மறு தட்டிலும் வைத்து நிறுத்தால் தாயின் தட்டுத்தான் மேலேயிருக்கும்.

—லாங்டேல் பிரபு.

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாத சந்தா ரூ. 5

மலர் 6 | 28—12—69 | இதழ் 24

யாருக்கு இந்த இழிவுகள்?

ஆமதாபாத்தில் கூடி ஆர்ப்பரித்துக் கலைந்துள்ள சிண்டிகேட் காங்கிரஸ்காரர்கள், எவ்வளவு கீழான குணம் படைத்தவர்களாய் மாறிப் போக வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தங்களை ஆளாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்குச் சில சான்றுகளை, செய்தி இதழ்கள் வெளியிட்டிருக்கின்றன.

இந்திரா காந்தியின் மீதுள்ள கோபமும், கொக்கரிப்பும், அம்மையாரின் தந்தை நேருவை இழித்துப் பேசுகிற அளவுக்குச் சென்றுவிட்டிருக்கிறது என்ற செய்தியினைப் படிக்கிறபோது, ஆத்திரத்தைவிட, பரிதாபமே மேலிடுகிறது சிண்டிகேட் காங்கிரசார்மீது.

நேரு, இந்தியப் பிரதமராய் இருந்தார் என்கிற முறையில் வேண்டுமானால் துணைக்கண்டத்து மக்களின் மதிப்புக்கும் மரியாதைக்கு முரியவராக ஆதல் கூடுமே ஒழிய, அவர் ஒரு காங்கிரசுக்காரர் என்கிற வகையில், முழுக்க முழுக்க காங்கிரசுககாரர்களுக்கே உரியவர் ஆவார். நேரு போற்றப்பட்டாலும், தூற்றப்பட்டாலும், அது காங்கிரசுக்காரர்களுக்கு உரியதே ஒழிய, தி. மு. க. போன்ற எதிர்க் கட்சிக்குரிய ஒன்றல்ல.

ஆனால், நேருவின் பொதுத் தொண்டும், உலக அறிவும், இந்த நாட்டுக்காக அயர் பட்ட பாடும், அவரை ஒரு காங்கிரஸ்காரர் என்று மட்டுமே கருதி புறக்கணித்துவிட முடியாத அளவு, எல்லா எதிர்க் கட்சிக்ளிலும்கூட மதிக்கப்படும் நிலைமையைத் தோற்றுவித்திருக்கிறது. தொண்டு மதிக்கப்பட வேண்டும் என்பது எல்லாக் கட்சிகளுக்குமே பொதுவானதாகும். இந்த வகையில்தான் ஆமதாபாதில் நேரு பழிக்கப்பட்டிருப்பதை வருந்தத்தக்க ஒன்றாகவே நாம் கருதுகிறோம்.

எந்த காந்தியாரின் பேரால், சிண்டிகேட்டார், ஆமதாபாத்தில் காங்கிரசைக் கூட்டினார்களோ, அந்த காந்தியடிகளே, நேருவை "என் அரசியல் வாரிசு" என்று வரய் மலிய அழைப்பாராட்டி யிருக்கிறார் என்பதை அறியாதவர்களாக ஆமதாபாதில் யாரும் கூடியிருக்கவில்லை.

பல்வேறுபட்ட அரசியல் பிரச்னைகளின் தீர்வுக்கு, காந்தியடிகளே நேருவின் ஆலோசனைகளைக் கேட்டுச் செயல்பட்டிருக்கிறார் என்பதை நேர்முகமாக அறிந்திருந்தோர்தான் அங்கே கூடியிருந்திருக்கிறார்கள். கூடியுவர்களில் சிலபேர்தான் காங்கிரஸ் கூட்டத்திலும், செயற்குழுவிலும்கூட, நேருவின் செயலாற்றலை பழிக்கின்ற அளவுக்குக் குற்றச் சாட்டுக்களை அடுக்கி இருக்கிறார்கள். கிருபளானியும், எஸ். கே. பாட்டிலும், தாரகேசுவரி சின்காவும் குறிப்பாக இதில் முழுப்பங்கு பெறுபவர்களாக இருக்கிறார்கள் என்பதை நம்மால் நினைத்துப் பார்க்கிறபோது சிரிப்பு வந்துகிறது.

ஆச்சார்ய கிருபளானி, காந்தியடிகளுடன் சமமாக வளர்ந்து வந்த முதியவர் என்கிற முறையிலும் காந்தியத்தை நேரு மறக்க முயன்றார் என்ற குற்றச் சாட்டு, பொதுவானதாலும், முக்கியத்துவமேதும் கொடுக்கத் தேவையில்லை,

சாட்டப்பட்ட நேரு இல்லையென்றால், துணைக் கண்டத்து அரசியல் வரலாற்றில், அமைச்சர்களது வரிசையில் எஸ். கே. பாட்டில் அவர்களது பெயரோ, தாரகேசுவரி அம்மையாரின் பெயரோ இடம் பெற்றிருக்க முடியுமோ, என்னவோ! இவர்களை வளர்த்துவிட்டவர் நேரு. சுதந்திரக் கனலை, மூட்டிய நேரு, இந்த சுந்தர புருடர்களையும், சுந்தராங்கிகளையும் வளர்த்திருக்கிறார்! வளர்ந்து வந்தவர்கள், வளர்த்தவரை வசை பொழிகிறார்கள்.

சுதந்திரப் போராட்டத்தில் நேருவின் பங்கு' குறைத்து மதிப்பிட முடியாததாகும். அது மட்டுமல்லாமல், காங்கிரஸ் கட்சிக்கு பேரிடிகளும், பேரபாயங்களும் நாடு தழுவிய முறையில் ஏற்பட்டபோதெல்லாம் அதனைக் கட்டிக் காத்து, ஆபத்துக்களிலிருந்து ஸ்தாபனத்தைக் காப்பாற்றித் தந்தவரும் ஆவார். சுதந்திரத்திற்குப் பிறகு, தலைமை அமைச்சர் பதவியை அவர்தான் ஏற்கவேண்டும் என்று உண்மையிலேயே ஒருமனதாக ஏற்கப்பட்ட பெருமகன் அவர். சாகின்றவரையில். அந்தப் பதவிக்கு எந்தவொருவராலுமே போட்டி இல்லை என்ற நிலையை உண்டாக்கி வைத்திருந்தவர் நேரு.

அவரைத்தான் சாடியிருக்கிறார்கள் சந்தர்ப்பவாதிகள். தேசவுடைமைக் கொள்கைக்கு நேரு முட்டுக்கட்டையாயிருந்தார் என்று குறை கூறியவர்கள் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தை தேசவுடைமையாக்கியவர் யார் என்பதை மறந்து, அல்லது மறைத்துவிட்டிருக்கிறார்கள் இரயில் போக்கு வரத்துத் துறையை தேசவுடைமையாக்கியதை மறந்து, அல்லது மறைத்துவிட்டிருக்கிறார்கள். ஸ்டேட் பாங்கை நாட்டுடைமையாக்கியதைக்கூட மறந்து அல்லது மறைத்துவிட்டிருக்கிறார்கள்.

இந்திரா காந்தியின் மீது கண்டனங்களைப் பொழிய நினைத்து தங்கள் "ஜோதி"யின் மீதே சேற்றைப் பூசிக் கொண்டிருக்கிறார்கள்.

சிண்டிகேட் காங்கிரசாரின் போக்கு, நமக்கு சோவியத் ருஷ்யாவின் ஒரு போக்கையே நினைவூட்டுகிறது; ஸ்டாலின் உயிரோடிருந்த வரையில், எதிர்த்துப் பேசவும் வக்கற்றிருந்த சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி, அவர் இறந்தபின், சிலைகளையும், படங்களையும் கூட அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டது.

அந்த முறையினைத்தான் சிண்டிகேட்டார் செய்ய நினைத்துவிட்டார்களோ என்னவோ! அதற்குத்தான் இது முதல்படியோ என்னவோ?

ஸ்டாலின் சர்வாதிகாரி என்ற பெயர் எடுத்தவர். ஆனால் நேரு?

கலிங்க ராணி

அண்ணாதுரை

[9]

எப்படி என் கதை? நவரசமும் ததும்புகிறது. பார்த்தாயா? இவ்வளவு பாரத்தைச் சுமந்துகொண்டு நான் எப்படி இறக்க முடியும்? வீரனே! உன்னிடம் நான் என் மனதில் இருந்ததைக் கூறிவிட்டேன்; என் நிதிக்கு உன்னைக் காவலனாக்கினேன்; என் மகளைக் கண்டுபிடி; அவள் மண் வீட்டிலிருந்தால், மாளிகைக்கு அழைத்துச் செல்; வாழ்க்கையில் வதைந்து கிடந்தால், பணமெனும் மருந்தூட்டி, அவள் நோயைப் போக்கு; நான் உலவிய மலர் புரியை ஒருமுறை போய்ப்பார்; கலிங்கரும் தமிழரும் ஆந்திரரும் தமிழரும், சேரரும் சோழரும் களத்திலே மோதிக்கொண்டு, சிதைகின்ற கோரம் நீங்க வழி கண்டுபிடி! செந்தமிழ் நாட்டை அரிக்கும் செல், எமது நாட்டை மட்டும் சும்மா விட்டுவிடவில்லை. கங்கையிலே உலவினர்; காவிரிக்கும் வந்தனர். அந்த ஆரியத்தை அழிக்க ஆயுதம் உதவாது. அறிவு வேண்டும். சாகப்போகும் நான் சாந்தோபதேசம் புரிகிறேன் என்று எண்ணி எள்ளி நகையாடாதே என்று கலிங்கவயோதிகன் கூறிக்கொண்டே களைத்துக் கண்களை மூடிக்கொண்டான். அவன் கூறிக்கொண்டதை வீரமணி சரியாகக் கேட்கவில்லை. அவனது செவியிலே, தூரத்திலே குதிரைகள் வேகமாக வரும் சத்தம் அதிகரித்தது. வயோதிகனை நோக்கினான். மயக்கமாகிக் கிடக்கக்கண்டான். மேலே ஒரு கம்பளத்தை எடுத்து போர்த்திவிட்டுக் குகை வாயிற்படி வந்து நின்றான். கருணாகரனின் உதவி அதிகாரி சில வீரர்களுடன், குகையை நோக்கித் தன் குதிரையின் காலடிகளை அடையாளம் கண்டுபிடித்து வரக்கண்டான். திகைத்தான். தான் சவாரி செய்து வந்திருந்த குதிரையை அவர்கள் கண்டதும், சந்தோஷத்தால் ஆரவாரித்து, "வீரமணியின் குதிரை! இங்கேதான் எங்காவது இருப்பான்" என்று கூவினர். தனக்குப் பகைவரால் ஏதோ ஆபத்து வந்துவிட்டதோ எனப் பயந்தே தன்னை அவர்கள் தேடிக்கொண்டு வருவது வீரமணிக்குப் புரிந்துவிட்டது. ஆனால், குகையிலே, அவர்கள் நுழைந்தால், கிழவனைக் கைது செய்வார்கள். நிதியைக் கைப்பற்றுவார்கள்; தான் கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடியாத நிலைமை தனக்கு உண்டாகுமே என்று வீரமணி அஞ்சினான். என்ன செய்வது என்று யோசித்தான். அவனது மனதிலே யோசனைகள் தோன்றும் வேகத்தை விட அதிக வேகமாக குதிரைகள் ஓடிவந்தன. அதோ குகை! என்று கூச்சல், குகைக்கருகே வந்தேவிட்டனர்.

மூவர், வீரமணி குகை வாயிற்படியண்டை நின்றுகொண்டு அவர்களை உள்ளே விடாமல் தடுக்கத் தீர்மானித்துவிட்டான். வந்தவர்களோ, வீரமணியைக் கண்டதும் சந்தோஷத்துடன், "இதோ வீரமணி! நல்ல வேளை, ஒரு ஆபத்தும் இல்லை." என்று கூறிக்கொண்டே, குதிரைகளை விட்டுக்கீழே இறங்கி, குகையை நோக்கி நடந்தனர். சாதாரண காலத்திலே, தனக்கு மேலதிகாரி வரக்கண்டால், வீரமணி காட்டும் மரியாதையைக் காட்டாமலும், தோழர்களைக் கண்டதும் வரவேற்கும் வழக்கத்துக்கு மாறாகவும், உருவிய வாளுடன், கடுகடுத்த முகத்துடன் வீரமணி நிற்கக் கண்ட மூவரும் சற்றுக் கோபமும் வெறுப்பும் கொண்டனர். அவர்கள் அவனருகே செல்லச் செல்ல அவன், அவர்களைப் பகைவர்கள்

போல் கருதுவது தெரியலாயிற்று. ஆகவே, அவர்கள் சற்றுப் பயந்தனர்.

"வீரமணி! இதென்ன விசித்திரமான நிலை! எங்களைக் கண்டு முறைப்பது ஏன்? நாங்கள் நீ கலிங்கரிடம் சிக்கிவிட்டாய் என்று கலங்கியன்றோ உன்னைத் தேடிக்கொண்டு வந்தோம். நீ எங்களை நோக்குவது வேதனை தருவதாக அன்றோ இருக்கிறது" என்று கூறினர். வீரமணி, "கண்டுபிடித்துவிட்டீர்களல்லவா? இனி ஏன் இங்கு வருகிறீர்கள் நான் சுகமாகத்தான் இருக்கிறேன். எந்தச் சூரனும் என்னைத் தூக்கிக்கொண்டு போய்விடவில்லை. இனி நீங்கள் போகலாம்." என்றுரைத்தான்.

மூவரும் பொறுமையை இழந்தனர். "களத்திலே கண்ட கோரக் காட்சிகளைக் கண்டு, மூளை குழம்பிவிட்டதோ" என்று கேட்டான் மூவரின் தலைவன், வீரமணி மௌனமாக இருந்தான். மூவரும் குகை வாயிற்படியை நெருங்கினர். உடைவாளை நீட்டினான் வீரமணி. 'இதைத் தாண்டித்தான், குகைக்குள்ளே நுழைய வேண்டும்" என்று கர்ச்சனை புரிந்தான். மூன்று உடைவாள்கள் வெளிவந்தன. போர் மூண்டுவிட்டது; முதல் வெட்டிலேயே, மூவரில் ஒருவனின் கை துண்டிக்கப்பட்டு விட்டது. போர் மும்முரமாக நடக்கையிலே, உள்ளே, கிழவன் "ஓ" என்று அலறினான். வீரமணியின் மனம் குகைக்குள்ளேயும். விழி வெளியேயும், என்ற நிலையாகிவிட்டது. நெருக்கடியை மறந்தான். வாளைக் கீழே போட்டுவிட்டு, உள்ளே ஓடினான். மற்றவர்கள் பின் தொடர்ந்தனர். ஒரு கூச்சலுடன், கிழவன் சாய்ந்துவிட்டான்.

தீபம் அணைந்துவிட்டது; வீரமணி அவனைப் பார்த்துக் கண்ணீர் உகுத்தான். வந்தவர்கள், "இதென்ன கோலம்" என்று கேட்டனர். வீரமணி "இவனோர் கலிங்க வீரன் இவனைக் காப்பாற்றவே, நான் இங்கு வந்தேன்" என்றான்.

"துரோகி!" என்றான் வந்த தலைவன், "பாதகன்! பசுத்தோல் போர்த்திய புலி! பாலைக் குடித்து விஷத்தைக் கக்கும் பாம்பு!" என்று பதட்டமாகப் பேசிக்கொண்டே வந்தவர்கள் குகையை ஆராய்ந்தனர். பேழையிலே பொக்கிஷம் இருக்கக் கண்டனர்.

"ஓஹோ! கலிங்கத்தானிடம் கைக்கூலி பெற்றுக்கொண்டுதான் காவல்காரன் வேலைக்கு வந்தான்" என்று இடிமுழக்கமெனக் கூவினான் வந்தவரின் தலைவன்.

"வாயை மூடு! உளறாதே! உன் நீச நாக்கைத் துண்டித்து நரிக்கு விருந்திடுவேன்." என்று வீரமணி கோபத்துடன் கூறினான். வந்த தலைவன். வீரமணி சாய்ந்து கிடந்த கிழவனைப் பார்த்துக்கொண்டே இருக்கையில், பாய்ந்து பிடித்துக்கொண்டான். மற்றவர்கள் உடனே கைகால்களைக் கட்டிக் கீழே உருட்டினர். மிக விசித்திரமான காட்சி! சீறிடும் புலிகள் மூன்று சிரித்தன! ஒரு கிழச் சிங்கம் செத்துக் கிடந்தது; ஒரு ஏறு கை கால் கட்டுண்டு கீழே உருண்டு கிடந்தது! ஏராளமான பொக்கிஷம்!

"போ புலிகேசா! போய் எனது படையைக் கூட்டி வா!" என்று தலைவன் உத்தரவிட்டான். அவனும் உத்தரவிற் கிணங்க, விரைந்து சென்று, படையுடன் வந்து சேர்ந்தான். "பிணம் இங்கே கிடக்கட்டும்! பொக்கிஷத்தை மூட்டைகளாக்கிக் குதிரைகள் மீது போடுங்கள். இந்தத் துரோகியின் கைகால்களில் இரும்புத் தளைகள் போட்டுக் குதிரைமீது இறுக்கிக் கட்டுங்கள். குலோத்துங்கனின் உப்பைத் தின்று, அவனுக்கே துரோகம் செய்ய எண்ணிய நீசனுக்குத் தக்க தண்டனையைத் தொண்டைமான் தருவார்" என்று தலைவன் உறுமினான். வீரமணி வாய் திறக்கவில்லை. ஆனால், அவன் உடல் பயத்தால் உதறிற்று.

வீரமணியை இழுத்துக்கொண்டு போய், படைத்தலைவன் முன் நிறுத்தினர். தொண்டைமானின் துயரம் சொல்லுந்தரத்தன்று, வீரமணி துரோகியானான் என்பது, ஆயிரம் வேல்கொண்டு இருதயத்தைத் தாக்குவதுபோல் இருந்தது. வீரன்!

இவனா துரோகியாவது? என்ன கொடுமை! எங்கிருந்து பிறந்தது இம்மடமை! கேவலம் பணத்துக்காக, நாட்டை, மன்னனை, மானத்தைக் காட்டிக்கொடுத்துவிடவா துணிவது. தமிழகத்திலே இத்தகைய கள்ளி முளைத்தால், பூந்தோட்டம் காடாகுமே! பஞ்சவர்ணக் கிளிக்குப் பூனைபோல், புள்ளிமான்களுக்குப் புலிபோல், வீரத்தை அரிக்கத் துரோகி கிளம்பினானே. அரண்மனையிலே இவனுக்கு எவ்வளவு மதிப்பு, மன்னனுக்கு இவனிடம் எவ்வளவு அக்கறை; எனக்கு இவனிடம் எவ்வளவு அன்பு! இவன் செயல் என்னை வேதனைக் குள்ளாக்குகிறதே என்று எண்ணி ஏங்கினான். வீரமணியோ, தொண்டைமானின் எதிரில் தலைகுனிந்துநின்றான். திகைப்புடன் படைத் தலைவர்கள் சுற்றிலும் நின்றனர். உருவிய வாளுடன் பாதுகாப்புப்படை நின்றது.

"வீரமணி! உண்மையைக் கூறு" தொண்டைமானின் குரல். துக்கத்தையே காட்டிற்று. வீரமணி மௌனமாகவே இருந்தான்.

"குகையிலே இருந்தவன் கலிங்கத்தானா?"

"ஆமாம்"

"அவனைக் காப்பாற்றவே நீ துணிந்தாயா?"

"ஆம்"

"துரோகி! அங்குப் பொக்கிஷமிருந்தது உனக்குத் தெரியுமல்லவா?"

"தெரியும்"

"உன்னை அழைக்கவந்த உன் தோழர்களை எதிர்த்தாயன்றோ?"

"எதிர்த்தேன்"

"என்ன துணிவடா உனக்கு? ஏன் இந்தத் துரோகம் செய்தாய்?"

"துரோகமில்லை, தலைவா!"

"தூர்த்தா! என்னைத் தலைவனென்று மறுமுறை கூறாதே. உன்போன்ற உலுத்தர்களுக்கா நான் தலைவன்! துரோகமின்றி, வேறு என்னடா அதற்குப் பெயர்? கட்டித் தழுவிடும் காமுகன், உடல் அளவு பார்த்தேனேயன்றி, கூடிடும் நோக்கமில்லை என்று கூறுவதுபோலிருக்கிறது உன் பேச்சு. நீசா, எந்தக் கண்கள் எதிரியின் பணத்தைக் கண்டு பூரித்தனவோ, அவை புண்ணாகட்டும். எந்தக் காதுகளிலே, துரோகப் பேச்சுக்கு இடங்கொடுத்தாயோ அவைகளைக் குடைந்தெடுக்கிறேன். துரோகி! சோழ மண்டலத்திலேயா, இத்தகைய சொரணை கெட்ட ஜென்மம் ஜனித்தது. வஞ்சக நரியே, வல்லமையுள்ள புலிபோல் வேடமிட்டு நடித்தாயே. என் எதிரே நிற்கிறாய் துணிவாக, உன் தலை இன்னும் பூமியிலே உருளவில்லை. கண்களிலே நீரா? நீலிக்கண்ணீர்!"

"என்னை வெட்டிவிட உத்திரவிடுங்கள், வீணாகத் திட்டவேண்டாம்."

"என்ன வேதாந்தம்! வஞ்சகா! வெட்டுவதா உன்னை! கைகால்களிலே விலங்கிட்டு, எந்தக் குதிரைமீது கெம்பீரமாகவும் பூரிப்பாகவும் ஏறிக்கொண்டு சென்றாயோ, அதே குதிரையின் வாலிலே கட்டி, எந்த நடனத்தின் கண்களுக்கு விருந்தாக உலவிவந்தாயோ, அவள் கண்களுக்கு வேதனை உருவாக, காரியுமிழும் பொருளாக்கி, மூன்று மண்டலங்களிலும் உன்னை மொட்டையடித்தத் தலையுடன் இழுத்துச் சென்று, பிறகன்றோ உயிரைப் போக்க வேண்டும்."

"விஷயமறியாது வேதனைப்படுகிறீர். இருளிலிருந்து நீங்கிய பிறகு எதுவும் தெரியும்."

"என்னடா இருள்? உன் மன இருள் தவிர வேறு என்ன?"

"நீர் நம்ப வேண்டுமென்று ஏதும் கூறவில்லை. பிறகோர் நாள் உதவவே, இதனைக் கூறுகிறேன். குகையிலே கலிங்கத்தானுடன் இவர்கள் என்னைக் கண்டதும் உண்மை; அங்குப் பொக்கிஷம் இருந்ததும் உண்மை; அதை நான் எடுத்துவர எண்ணினதும் உண்மை. இவர்களை எதிர்த்தேன்; இல்லையென்றுரைக்கவில்லை. ஆனால், துரோக சிந்தனை எனக்கு இல்லை. கலிங்க வீரனுக்குத் தந்த வாக்கின்படி நான் நடக்கவேண்டும். அந்த இரகசியத்தை வெளியே உரைப்பதற்கில்லை. நீர் என்னவென்று தீர்மானித்து, எப்பாடு படுத்தினாலும், நான் தலைகுனியத்தான் வேண்டும். எனகுச் சோழனே மன்னன், சோழநாடே என் பூமி, நான் துரோகியல்ல, துரோகியல்ல! என்னை நம்பு."

"உன்னையா? நம்பவா? ஓஹோ! உத்தமனே, உன்னைச் சோழநாட்டின் ஜோதிஸ்வரூபனாக்க வேண்டும். ஏடா! மூடர்களே, இவன் பேச்சைக் கேட்டும், சும்மா இருக்கிறீர்கள்? கோயில் கட்டுங்கள், கொட்டுமுழக்கு நடக்கட்டும்."

"கொலை, இந்தக் கேலியைவிட கொடுமையாக இராது."

இந்தப் பேச்சுக்குப் பிறகு, தொண்டைமான் கோபத்துடன், ஓங்கி ஒரு அறை கொடுத்தான். வீரமணியின் கன்னத்தில். பிறகு உரத்த குரலிலே கூறினான். "இவனது கைக்கட்டுகளை அவிழ்த்து விடுங்கள். இனி இவன் சோழ மண்டலத்துக்குள் நுழையக்கூடாது" என்று தண்டனை உத்திரவைக் கூறிவிட்டு, கூடாரத்துக்குள் சென்றுவிட்டான்.

தி. மா. மு. க. பொது மாநாடு

1970-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24, 25 - ஆகிய சனி, ஞாயிறு நாட்களில் சென்னை எழும்பூர் பெரியார் திடலில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகப் பொது மாநாடு நடைபெறுகிறது. இவ்விரு நாட்களிலும் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மாணவர் கழகத்தின் வரலாற்றுக் காவியமாகவும், அறிஞர் பலரின் எழுத்தோவியம் நிறைந்த கருத்துக் கருவூலமாகவும் விளங்கும் மாணவர் மலர் மாநாட்டில் வெளியிடப்படும்,

மாணவ கிளைக் கழகச் செயலாளர்கள் மாநாட்டுப் பொருளாளரிடமிருந்து நன்கொடைப் புத்தகங்களைப் பெற்று, விரைந்து நிதி திரட்டி அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

பொருளாளர் முகவரி:
பொருளாளர்.
தி. மா. மு. க. பொது மாநாடு,
207, சட்டக் கல்லூரி விடுதி,
சென்னை—10.

வரவேற்புக் குழுவினர்,

ஊருக்குப் போகையில் ஓர் உரையாடல்.....!

உண்மையில் நிகழ்ந்த உரையாடல். தொடர்புடையவர்கள் வருந்த வேண்டா. விளக்கத்துக்காக மட்டுமே எடுத்துக் காட்டப் படுகிறது.

—கச்சியப்பன்—

ஆறு சக்கரங்களின் மேலே அரசினர் பேருந்து காஞ்சிபுரம் நோக்கி விரைந்து கொண்டிருந்தது. வண்டியின் பின் கடைசி வரிசையில் வலது மூலையில் அமர்ந்து புத்தகப் படிப்பில் மூழ்கியிருந்தேன். வண்டியில் உயர்நிலைப்பள்ளி வகுப்புப் படிக்கும் பிள்ளைகளே நிறைந்திருந்தார்கள். வண்டி பூவிருந்தவல்லியைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தது. வண்டியின் இரைச்சலையும் மாணவர்கள் கூச்சலையும் மீறி எனக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தவர்கள் உரத்த குரலில் வாதிட்டுக் கொண்டிருந்தனர்.

தமிழ் நாட்டின் வறட்சிப் பகுதிகளை நேரில் பார்வையிட தலைமையமைச்சர் இந்திரா காந்தி வர இருந்தார்களே, அதற்கு ஒரு கிழமை முந்தி. என் அருகே அமர்ந்திருந்த இருவரும் பாதையின் இருமருங்கும் இருந்த வயல்களைப் பார்த்துக்கொண்டே தமிழக அரசைக் கேலி செய்து கொண்டும் கண்டித்துப் பேசிக்கொண்டும் இருந்தார்கள். அது அவர்கள் உரிமை! நாம் சொல்ல என்ன இருக்கிறது? பூவிருந்தவல்லி வரையும் எதையும் கவனிக்காமல் படித்துக் கொண்டிருந்த எனக்கு அவர்கள் வாதம் உரத்த கட்டத்தை அடைந்த பொழுது மேலே படிக்க முடியவில்லை. வண்டிக்குள் பார்த்தேன். அது ஏதோ 'மாணவர் தனிஊர்தி' போல இருந்தது. சிலர் பாடிக் கொண்டும் சிலர் அரட்டை அடித்துக்கொண்டும், சிலர் சீட்டுகூட ஆடிக்கொண்டும் இருந்தார்கள்.

என் அருகே இருந்தவர், வலப்புறத்தில் விசை நீரேற்றியால் நீர் பாய்ந்த ஒரு பசிய திட்டு நிலத்தைக் காட்டி, "'இதற்குத்தான் வறட்சி என்று பேரா? மத்திய அரசை நன்றாக ஏமாற்றுகிறார்கள்!" என்றார்.

"இதற்காகப் போய் அந்த அம்மா வருகிறார்களே அதைச் சொல்லுங்கள்!"—அவருடைய நண்பர் இது.

"இதை வறட்சிஎன்றால் இராஜஸ்தானத்து நிலைமைக்கு என்ன பேரோ?

"அங்கே பஞ்சமே தலைவிரித்து ஆடுகிறதாம். அதை விளக்கிச் சொல்ல யார் இருக்கிறார்கள்."

பண்போடு எழுத்தில் போடக்கூடியதை மட்டுமே நான் இங்கே எழுதுகிறேன். அவர்கள் என்னென்னவோ பேசினார்கள். தமிழக அமைச்சர்களைப் பற்றித் தாறுமாறாக—தரக் குறைவாக வெல்லாம் பேசினார்கள். இந்த நிலையிலேதான் நான் மெல்ல திரும்பிப் பார்த்தேன். அவர்கள் அறிவுக் குறைவைப் பார்த்து எனக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் அவர்கள் பேச்சில் நேரடியாகத் தலையிடுவதும் பண்புக் குறைவான செயலாய்ப் பட்டது. எனவே மெல்ல,

"எங்கே போகிறீர்கள்?"

"காஞ்சிபுரம்."

"சொந்த ஊரே காஞ்சிபுரமா?"

"இல்லை, சென்னை தான். பிள்ளைகளைச் சுற்றுலா அழைத்துச் செல்கிறோம்."

"ஓ! ஆசிரியர்களா? நீங்கள் என்ன பாட ஆசிரியர்?"

"நான் தமிழ்; அவர் வரலாறு. சரி, நீங்கள்?" நான் பணி செய்யும் இடம் பற்றிச் சொன்னேன். சொல்லி விட்டு,

"இந்த வறட்சி, பஞ்சம் என்பது பற்றிப் பேசிக்கொண்டிருந்தீர்களே, அதுபற்றி ஒரு விளக்கம் தர நினைத்தேன்......"

"என்ன அது?"

"நீங்கள் வறட்சியையும் பஞ்சத்தையும் ஒன்றாகக் கருதிப் பேசுகிறீர்கள், அதனால்தான் தமிழ்நாட்டு வறட்சியையும் இராஜஸ்தானத்துப் பஞ்சத்தையும் ஒன்றாக்குகிறீர்கள். வறட்சி வேறு பஞ்சம் வேறு."

"அது எப்படி? வறட்சியின் ஒரு நிலைதான் பஞ்சம்,"

"அங்கேதான் நீங்கள் தவறு செய்கிறீர்கள். நீங்களே (Drought Famine) என்று இருவேறு ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துகிறீர்கள். இரண்டுக்கும் ஒரே பொருள் தானா?"

"கிட்டத்தட்ட ஒன்றுதான்."

"நீங்கள் புரியாத குழந்தைகளுக்கு விளக்கம் தர வேண்டியவர், 'கிட்டத்தட்ட' என்று நீங்களே குழப்பினால்"

"எனக்கு ஒன்றும் குழப்பம் இல்லை; சரியாகத்தான் பேசுகிறேன்"—தமிழாசிரியர் ஆத்திரமாகக் கத்தினார்.

"ஏன் ஆத்திரப் படுகிறீர்கள்? தெரியாததைத் தெரிந்துகொள்வதிலேதான் நம்முடைய சிறப்பே இருக்கிறது. வரட்சி' என்பது வானம் பொய்த்து வயலுக்குப் பாசன நீர் கூட இல்லாமல் வறண்டு கிடக்கிற நிலைமை. 'பஞ்சம்' என்பதோ நீரும் வறண்டு, நிலமும் விளையாமல் அதனால் உணவுப் பண்டங்கள் அருகினரே பட்டினியில்வாடும் நிலைமை. வறட்சிக்குப் பின்னால் வரும் பயங்கரம் அது! அதைத்தானே வற்கடம் என்று இலக்கியங்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள்."

"சரி. அதோ தெரிகிற பசுமையான நிலங்களைப் பார்த்த பிறகுங் கூட நீங்கள் இங்கே வறட்சி என்கிறீர்களா?"

"சரி. பஞ்சம் இங்கே இல்லை வறட்சி என்று சொல்லப்படுவதை ஒப்புக்கொள்கிறீர்கள் அப்படித் தானே!"

"அதுகூட இல்லை என்கிறேன்."

"அப்படியானால் நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையாய்க் கேளுங்கள், நம்முடைய நாட்டில் டாட்டாக்கள் பிர்லாக்கள், பஜாஜ்கள், கோயங்காக்கள் இருப்பதாலே நம்முடையநாடு செல்வ வளங் கொழிக்கும் நாடென்று முடிவு செய்துவிடலாமோ?

"அதெப்படி?......"

"அதேபோலத்தான் ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் கிடக்கிற இறைப்புக் கிணறுள்ள நிலங்களைப் பார்த்துவிட்டு நாடே இப்படி இருக்கிறதென்று......

"பின் என்ன? நீங்கள் சொல்வது அப்படித்தானே இருக்கிறது."

"இதற்குப்போய் ஒரு நாட்டின் தலைமையமைச்சர் வருகிறார்களே என்பதற்காகச் சொன்னேன்."

"நீங்கள் கருத்தை மாற்றிக் கொண்டே போகிறீர்கள். அப்படியானால் வறட்சி இருக்கிறது. அதை தலைமையமைச்சர் ஏன் வந்து பார்வையிடவேண்டும் என்கிறீர்கள் அவ்வளவுதானே...!

"ஆமாம்"

"இது வெறும் வயிற்றெரிச்சல். இப்படிச் சொல்வதற்காக வருத்தப் படாதீர்கள். யாரோ சொல்வதையெல்லாம் நீங்கள் கேட்டுப் பேசுவதைவிட நீங்களே சிந்தியுங்கள்,

நீங்கள் ஆசிரியர்கள் அல்லவா? இந்த வறட்சிக்கே தலைமையமைச்சர் வருவதென்றால் இராஜஸ்தான் பஞ்சம் என்னவோ என்பது உங்கள் கேள்வி. இல்லையா?

"ஆமாம்"

"இராஜஸ்தான் அரசு வறட்சி நிலையிலே தூங்கிவிட்டது. பஞ்சம் வந்த பின் துடித்துச் சாகும் மக்களைக் கண்டு மிரள விழிக்கிறது. தமிழக அரசோ பஞ்சம் வருமுன் காக்கத் துடிக்கிறது. அதைகூடத் தவறு என்கிறீர்களா? நடுவரசிடமிருந்து துணைப்பணம் பெற்றும் வறட்சி வளர்ந்து பஞ்சம் தலைவிரித்தாடினால் நீங்களே என்ன சொல்லுவீர்கள்'

"உண்மை தான்"!

"அதனால்தான் ஆராயாமல்—சொந்தமாய்ச் சிந்திக்காமல் பேசுவது நன்றாக இல்லை."

"நீங்கள் நன்றாக எங்களை மடக்கி விட்டீர்கள்.''

"அது கிடக்கட்டும். இந்த பிள்ளைகள் எந்தப் பள்ளி?" வடசென்னையில் ஒரு தனியார்ப் பள்ளியின் பெயரைச் சொன்னார் ஆசிரியர்.

"காஞ்சிபுரம் நகருக்குச் சுற்றுலா சென்று வரலாறும் கலையும் இணைந்து மிளிரும் இடங்களைக் காட்டத் தானே அழைத்துச் செல்லுகிறீர்கள்?"

"சும்மா ஒரு 'டூர்' அரசாங்கம் இதற்காக மானியம் தருகிறது. பிள்ளைகளிடம் தலைக்கு இரண்டு. மூன்று ரூபாய் தொகுக்கிறோம். அழைத்துப்போய் இரண்டொரு கோவில்களைக் காட்டி அழைத்து வரவேண்டியது. அவ்வளவுதான்" —இது வரலாற்று ஆசிரியர்.

"சும்மா கோவிலைக்காட்ட இவ்வளவு செலவிட்டுக் காஞ்சிபுரம் போவானேன்? சென்னையிலே பார்த்தசாரதி கபாலி, கந்தசாமி கோயில்கள் இல்லையா?" ஆசிரியர் இருவரும் அமைதியாக இருந்தனர்.

"ஒருவர் தமிழாசிரியர், ஒருவர் வரலாற்றாசிரியர் என்கிறீர்கள். இருவரும் சேர்ந்தால் இந்தப் பிள்ளைகளுக்கு இந்த வழிப்போக்கிலேயே எவ்வளவு அறிவூட்டலாம் தெரியுமா?"

"எப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"நீங்கள் காஞ்சிபுரம் போவதென்று முடிவு செய்த உடனேயே, காஞ்சி தமிழ்நாட்டின் அமைப்பில் எந்த இடத்தில் இருக்கிறது. அட்சரேகை-தீர்க்கரேகை என்றெல்லாம் சொல்லுகிறீர்களே, அதன்படி காஞ்சிபுரம் எங்கே அமைந்திருக்கிறது என்று சொல்லித் தரவேண்டும். கடல் மட்டத்திலிருந்து எவ்வளவு உயரத்தில் இருக்கிறது? ஊரின் பரப்பளவு என்ன? மக்கள் தொகை எவ்வளவு? இதையெல்லாம் பிள்ளைகளுக்குச் சொல்லவேண்டும். தமிழாசிரியருக்குக் காஞ்சிபுரம் பற்றிச் சொல்லவே வேண்டாம். திருக்குறளுக்கு உரை கண்ட பரிமேலழகர் பிறந்த ஊர் என்பார். நந்திக் கலம்பகம் செய்த புல்லவ மன்னன் நந்திவர்மன் ஆண்ட மண் என்பார். சமயங்கள் அனைத்தும் தழைத்துச் செழித்த ஊர் என்ற இலக்கியங்களை அவர் பிள்ளைகளுக்குச் சொல்லலாம்; இல்லையா? வரலாற்று ஆசிரியருக்கோ சொல்லியா தரவேண்டும்? குறும்பர் தொண்டையர் தொடங்கி முற்காலச் சோழர், பல்லவர், பிற்காலச் சோழர், பாண்டியர், விசயநகரத்தார். பிறகு சுல்தான்கள், நவாபுகள். வெள்ளைக்காரர் ஈறாய் காஞ்சிபுரத்தைத் தொட்டாலே தமிழ்நாட்டின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளலாமே மேலெழுந்த வாரியாய் இவற்றையெல்லாம் மாணவர்களுக்குக் கோடி காட்டலாம் அல்லவா?

"உண்மைதான்"—இரு ஆசிரியர்களும் ஒரே நேரத்தில் சொன்னார்கள்.

"கோவில்களுக்குச் செல்வதாய்ச் சொன்னீர்கள். அவை வரலாற்றுச் சிறப்புமிக்க மிகப்பெரிய பேரரசுகளின் நினைவுச் சின்னங்கள் அல்லவா? அவற்றைப்பற்றித் தனித் தனியே என்ன தெரிந்துகொண்டிருக்கிறீர்கள்...?

"ஒன்றும் தெரியாது."

"எந்த ஊருக்கும் மாணவர்களை அழைத்துச் செல்லுமுன்னால் அந்த ஊரைப்பற்றிய எல்லா விவரங்களையும் தெரிந்துவைத்துக்கொள்ளுங்கள். குறிப்பாக நீங்கள் அந்த ஊரில் மாணவர்களுக்குக் காட்ட இருக்கும் இடங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளுங்கள். கைலாசநாதர் கோவிலில் போய் நீங்கள் நின்று பார்க்கையில் ஒரு மாணவன், "இது யார் கட்டிய கோயில்?" என்று கேட்டால் என்ன செய்வீர்கள். வெறுமே 'பல்லவ மன்னன்' என்றால், கேட்ட மாணவனுடைய அறிவுப்பசி தீராது.

எனவே எந்த நேரத்திலும் எந்த மாணவன் கேட்கும் கேள்விக்கும் விடை இறுக்க அணியமாய் இருக்க வேண்டும். அப்போதுதான் மாணவனுக்கு ஆசிரியர்மீது அச்சத்தோடு கூடிய ஒரு பற்று பிறக்கும். அந்த அச்சம்இருந்தால்தான் மாணவர்களுக்கும் ஒழுக்கம் வளரும். தப்புத் தவறுகளில் இறங்கமாட்டார்கள். துவக்க-உயர்நிலைப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் இதைச் செய்தால் மேலும் எதிர்கால மாணவர் சமுதாயம் விரைந்து முன்னேறும். மாணவர் படிக்கிற உரை நூலையே ஆசிரியரும் கையிலே வைத்துக்கொண்டு பாடம் நடத்தினால் ஆசிரியரிடம் அச்சம் எப்படிப் பிறக்கும்?"

"இதையெல்லாம் யார்சார் படித்துக்கொண்டிருப்பது?"

'நான் உங்களை மின்சார சூழ்ச்சியம் (Engine) எப்படி இயங்குகிறது என்றுதெரிந்து கொள்ளச் சொன்னேன்? அணுவை உடைத்து ஆக்கத்துக்குப் பயன் படுத்தும் விந்தை எப்படி என்று படிக்கச் சொன்னேன், உங்கள் பாடத்தோடு தொடர்புடைய சில செய்திகளையேனும் நீங்கள்தெரிந்து கொள்ள வேண்டாமா? நான் இருக்கிற துறையைப்பற்றிச் சொன்னேன். எனக்கெதற்கு இந்தச் செய்திகள்? என்றாலும் ஏன் தெரிந்து வைத்திருக்கிறேன்? நாலுபேரிடையில் 'நல்லவன்' என்றும் பேரெடுப்பதோடு 'வல்லவன்' என்றும் பேரெடுக்க வேண்டாமா? அதிலும் நீங்கள் ஆசிரியர்கள் ஆயிற்றே."

வண்டி வாலாசாபாத் வந்துவிட்டது. நான் விடவில்லை தொடர்ந்தேன்.

"இதைக்கூட பிள்ளைகளுக்குச் சொல்லலாம். இந்தப் பகுதியை ஆர்க்காட்டு நவாபு வாலாஜா முகமதலி ஆண்டதன் நினைவாக இந்த ஊர் வாலாஜாபாத் என்றிருக்கிறது. உருது மொழியில் அபாத் என்றால் ஊர். இதற்கு தண்டு சீவரம் என்றொரு பழைய பேரும் உண்டு. சீயவரம் என்ற சோழர்காலப் பெயர் சீவரம் என்று காலப்போக்கில் திரிந்தது. அதந்தச்சீவரத்தில் ஆங்கிலேயர்-பிரெஞ்சுக்காரர் தண்டு(சேனை) இறங்கிய இடம் தண்டு சீவரம். இப்படியெல்லாம் போகிற வழியில்

(12-ம்பக்கம் பார்க்க)

கடமை

> ஒருமுறை மானிடக் கட்டளைகளிலிருந்து வழுவினால், அது எவ்வளவு தூரம் விலகிச் செல்லச் செய்துவிடுகின்றது!
>
> —பைரன்.

இருட்டில் இருவர்

பொறி கலங்கி நின்றேன், அப்படியொரு கேள்வியை அவர் கேட்டபோது.

''...இல்லை சார்! அபாண்டம்! நானும் மாலதியும் பழகுவது எந்தத் தவறான நோக்கத்திலும் அல்ல, சார்! எனக்கு மனைவியிருக்கிறாள்—ஒரு குழந்தையும் இருக்கிறது. என் மீது இப்படியொரு அபவாதமா...?'' ஆவேசத்துடன் வீறிட்டேன்.

பள்ளியின் பொறுப்பாளர் சிரித்தார்; ''அனமதி!...... அனமதி!...... ராஜு, உங்களைப்பற்றி நான் அறிவேன். உங்களையும், தலைமையாசிரியை மாலதியையும் சேர்த்துக் கதை கட்டிவிட யாரோ ஒரு ஆள் முனைந்து நிற்கிறான். அவன் எழுதிய இந்த மொட்டைக் கடிதம் அதைத் தானே காட்டுகிறது! இந்தத் தலையும் வாலுமற்ற நாலுவரிக் கடிதத்தை நான் மதிக்காமல் எறிந்து விடலாம். நாளைக்கு இன்னும் நாலு பேர்களிடம் அவன் இதே மாதிரி விபரீதமாகக் கதை கட்டிவிட்டால்—பொய்யும் திரும்பத் திரும்பச் சொன்னால் மெய்யாகிவிடுகிற மாதிரி—உங்கள் மீது பழி சுமந்துவிடுமே, ராஜு! நீங்கள் ஆண்பிள்ளை...ஆனால் அந்தப் பெண் மாலதி?...அவள் நிலை? இவ்வளவு சிறிய வயதில் அவளுக்கு இருக்கும் அறிவுத்திறன், தலைமை ஆசிரியை பதவிக்கான படிப்பும், யோக்யதாம்சங்களும் மிக அதிகம்! ஆனால் பெண் என்ற காரணத்திற்காக அவளை வேலையில் சேர்க்கத் தயங்கினேன்... அவள் மீது பழி சூழ்ந்தால் அவள் வாழ்வே பாழாகிவிடுமே, ராஜு!...''

நான் குழம்பி நின்றேன். ''சரி சார், இனி நான் கவனமாக இருக்க முயல்கிறேன்!...'' என்றுகூறிவிட்டு மெல்ல நடந்தேன். வழியில் நண்பன் பாலு எதிர்ப்பட்டான்.

சிரித்துக்கொண்டே அவன் கேட்டான். ''என்ன? 'கரஸ்பாண்டெண்'டிடம் மந்திராலோசனை நடத்தி விட்டு வருகிறாப்போல இருக்கே?...—அவனுடைய கேலியும், நமுட்டுச் சிரிப்பும், கண்களில் ததும்பி நின்ற விஷமப் பார்வையும்...மொட்டைக் கடிதம் எழுதிய பாவி இவன்தானா?

''பாலு! இந்த ஸ்கூலில் இருக்கிற ஒரு மகாமேதை தன் கையெழுத்தைப் போடப் பயந்து கொண்டு எழுதிய கிறுக்கலைப் பார்த்து நம் பள்ளிப் பொறுப்பாளர் விழுந்து விழுந்து சிரித்துவிட்டு என்னை அழைத்து, ''இந்தக்கையெழுத்தைப் பார் ராஜு! இதை எழுதியமுட்டாள் யார் என்று உனக்குத் தெரிகிறதா?...'' என்று கேட்டார்.

ஜே. வி. நாதன்

அந்தத் துணிச்சலற்ற கோழையை நான் அறிவேன்! ஆனாலும் 'மறப்போம் மன்னிப்போம்' என்ற கொள்கை வழி வந்தவன் நான். 'தெரியாது சார்!' என்று அவரிடம் கூறிவிட்டு வந்துவிட்டேன்...என்று சொல்லியபடியே பாலுவின் முகத்தைக் கூர்மையாகப் பார்த்தேன்.

ஏறிட்டு நோக்கத் துணிவற்ற தன் விழிகளைத் தாழ்த்திக்கொண்டு அவன் மெல்ல நடந்தான். நான் சிரித்துக் கொண்டேன்.

• • •

புதிரே, உனக்குத்தான் மாலதி என்று பெயரா?

கவிஞர்களும், கதாசிரியர்களும் பெண்ணை ஒரு புதிர் என்று உவமிப்பது இவளுக்குத்தான் சாலப் பொருந்தும்!

மாலதி ஒரு புதிரா?...ஏன்எப்படி? என்னையே நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருமணம் ஆனவன்—ஒரு மழலைச் செல்வத்துக்குத் தகப்பன், என்று தெரிந்தும் என்னிடம் காதலை எதிர்பார்க்கிறாளே, தனக்கு ஒரு ஆண் துணை வேண்டும் என்ற நினைப்பால் எழுந்ததா அவளின் விபரீத ஆசை! பைத்தியக்காரி!

தன் உள்ளத்தின் ஆசைகளை விழியால் கூறும் சமயம், இளமொழியால் கூற மறுக்கிறாளே, இது புதிர் இல்லையா?

அன்று—மதியம் இடைவேளைப் போதில் எதிரே வந்து அமர்ந்து தன் டிபன் பாத்திரத்தைத் திறந்து கவளம் கவளமாக என் உள்ளங்கையில் வைத்து சாப்பிடச் சொன்னாளே—அதன் பிறகு நான் எவ்வளவு மறுத்தும் என் உணவில் அவளும் பங்கு கொண்டாளே—எனக்குத்தான் அப்போது எத்தனை வியப்பு!

வியப்புக்குக் காரணம்; பிராமணாள் அகத்துப் பெண்ணான மாலதி என் அசைவ உணவை ஏற்பாள் என்று நான் எதிர்பார்த்தேனா என்ன?...புதிர்!...புதிர்!

பள்ளி முடிந்ததும் இரண்டு மைல் தூரம் ரயில் தண்டவாளத்தை ஒட்டி நடந்து சென்றால்தான் அவளும் நானும் எங்கள் வீடுகளை அடைய முடியும். எங்கள் இருவர் வீடுகளும் ஒரே ஊரில், வெவ்வேறு பகுதிகளில் இருக்கின்றன.

பள்ளியில் நான் ஆசிரியர்; அவள் தலைமை ஆசிரியை, ஆனாலும் அவளைப் பெயரிட்டுத்தான் நான் அழைக்கவேண்டும் — அநாவசிய மரியாதைகள் கூடாது என்று அவள் உத்தரவு. ஒரு ஆணின்

ஆளுகைக்குள் ஆட்பட விரும்பும், பெண்ணின் சுயநல மற்ற அன்பின் விசித்திரத்தை எண்ணும்போது எனக்கு மெய் சிலிர்க்கும். தமிழகத்துப் பெண்ணினமே, நீ வாழ்க!...' என்று வாய்விட்டு மகிழ்ச்சிக் கூச்சலிட வேண்டும்போல ஒரு ஆவல் துடிப்பு.

செவ்வானம் மேலைத் திசையில் வண்ணக் கோலமிழைத்துக் கொண்டிருந்த நேரம்...

பள்ளி முடிந்து மாலதியும் நானும் தண்டவாளத்தை ஒட்டிய பாதையில் நடந்து கொண்டிருந்தோம். ரோஜாப் பூக்கள் பொதிந்த செவ்வண்ண நைலான் புடவையும், வெளிர் நீல ஜாக்கெட்டும் அணிந்திருந்தாள். கோல நிலவாய் முகம் ஒளி வீச, எழில் பூத்த அழகுச் சிலையாய் அவள் காட்சி தந்தாள்.

மேனியை சுகமாய் வருடும் தென்றலின் சிலிர்ப்பு...அசைந்தாடும் நாணற் புதர்களின் அழகுக் காட்சி...தொலைதூர வானின் செஞ்சாந்துக் குழம்புத் தோற்றம்......அடிவானின் அற்புத அழகையும், அவளின் எழிலையும் இணைத்து என் மனதில் பிரசவ வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தேன், ஏதேனும் அழகிய கவிதை ஒன்று பிறக்காதா, என்று! மாலதி கேட்டாள்;

"ஏன் சார், திடீரென்று நாம் சின்னக் குழந்தைகளானல் எப்படி இருக்கும்?..."

அவளுடைய குழந்தைத் தனமான கேள்வி என் சிறுபிராயத்து நினைவுகளைக் கிளறிவிட்டது. அந்த நினைவின் நிழலில் நான் சிறிது இளைப்பாறி மீண்டும் கண் திறந்த போது அவளைக் காணேம்!

தொலைவில் மாலதி புள்ளிமானைப் போலத் துள்ளியோடிக்கொண்டிருந்தது தெரிந்தது.

அவளுடைய அழகுத் துள்ளல் ....பாய்ச்சல்! நான் கவிஞனு—இல்லை மனிதனு?.,...அல்லது மாலதியைப்போல நானும் குழந்தையாக மறுபிறவி எடுத்துவிட்டேனு?...... "மாலூ!" என்று கூவியபடி நானும் ஓடினேன். 'ஓடிப்பிடித்தல்' என்று சிறு வயதில் விளையாடியதெல்லாம் நினைவுக்கு வந்தது. நான்கே பாய்ச்சல்கள். அவள் என் கையில் சிக்கிக்கொண்டாள்!

பின் அதிர்ச்சியுற்றவளாய் கனவு கலைந்துவிட்ட பாவனையில்—நனவுலக விழிப்பில் என்னை விழித்துப் பார்த்தபடி நின்ருள் மாலதி, சட்டென்று அவள் கையை உதறினேன். இரண்டு அடிகள் தூரம் தள்ளி நின்றேன். என் உடல் கிடுகிடுவென நடுங்கத் தொடங்கியது. ஓ......அவள் என்னைப்பற்றி என்ன நினைப்பாள்?

என் மனைவி கல்யாணி நினைவிற்கு வந்தாள். மாலதியைத் தீண்டிய கரம் தீயெனத் தகித்தது.

• • •

'கற்பனை மனம் மிகப் பொல்லாதது. அது இன்பமானுலும், சிறு துன்பமானுலும் ஒரேயடியாகப் பெரிது படுத்திக்கொண்டு கூத்தாடும்......'

கட்டுரை நோட்டுக்களைத் திருத்திக்கொண்டிருந்தேன், மதிய இடைவேளை நேரத்தில். எதிரே வந்து அமர்ந்த மாலதி திடீரென்று விம்மினுள். புதிரின் மற்றொரு காட்சி இது! நான் அவளிடம் பேசவில்லை என்று கோபமோ — வேறு காரணமோ — புதிர் நிறைந்தவளே மாலதி! உனக்குஎன்ன பைத்தியமா பிடித்திருக்கிறது?......ஏன் இந்தத் திடீர் அழுகை...?

அந்த அற்புதமான விழிகளில் முத்துக் கோத்தாற்போன்று நீர்த் துளிகள், நான் பதறினேன். கைக்குட்டையை எடுத்து, கண்ணீரைத் துடைக்க மாலதியின் விழியருகே கொண்டு சென்றேன் 'டக்'கென்று என் கரம் அப்படியே நின்றது, தடுமாறினேன். அவளின் கன்னங்களை நான் தீண்டுவதா?.........கைக்குட்டையை அவள் முன் போட்டுவிட்டுத் தலைகுனிந்தேன்.

மாலதி சீறினுள். கைக்குட்டையை வீசி எறிந்தாள். "கோழை! கோழை!" என்று என்னை வாய் வலிக்கத் திட்டினுள்,

"யாரை யார் கோழை என்பது... மாலதி?" என்று கேட்டேன்—மனத்தில் இருப்பதைக் கூற அஞ்சும் அவள்தானே கோழை! என் செயலை யாராவது பார்த்துவிட்டு அவள் மீது பழிசுமத்திப் பேசலாகாதே என்று பின்வாங்கிய நானு கோழை?

அவள் விடுவிடென்று தன் அறைக்குச் சென்ருள். மதியவேளைச் சிற்றுண்டிக்காகச் சென்றிருந்த சக ஆசிரியர்களும். மாணவர்களும் வரத்தொடங்கவே, பள்ளிக்கூடத்தின் மதிய வகுப்புக்கள் தொடங்கும் கலகலப்புப் பிறந்தது. நான் கடமையில் மூழ்கினேன்.

மாலதி அடிக்கடி என்னைச் சந்தித்துப் பேசுவது பிறருக்குத் தவருகப் படாவிட்டாலும், பொருமையில் வெந்துகொண்டிருந்த ஒரு ஜீவனுக்கு மட்டும் பொறுக்க முடியாத ஒன்ருகப்பட்டதுபோலும்! பாலு! தன் வலையில் அந்தப் பெண்புரு விழாதா என்று தவங்கிடந்த பாலு, என்னையும் மாலதியையும் ரகசியமாய் கண்காணித்தே வந்திருக்கிருன் என்பது அவனுடைய குத்தல் பேச்சுக்களிலிருந்தும், மொட்டைக் கடிதம் மூலமாகவும் விளங்கியது.

கொக்கி போன்ற எழுத்துக்கள். பாலுவின் கைங்கர்யம்தான் அந்தக் கடிதம் என்பதை எனக்குக் காட்டிவிட்டன. பள்ளிப் 'பொறுப்பாளருக்கு' அதைச் சொல்லாமல் விட்டேன். காரணம் அவன் என் நண்பன்; சக ஆசிரியனும்கூட! தவிரவும் இன்னு செய்தாரை ஒறுத்தல் எனக்குப் பழக்கமில்லாத ஒன்று.

• • •

"ராஜு!......நீ ஆண்பிள்ளை...... ஆனல் மாலதியின் பெயருக்குக் களங்கம் சூழும்படி நீ இடம்தரக் கூடாது!......" பள்ளிக்கூடத்தின் பொறுப்பாளரின் எச்சரிக்கை என் காதில் திரும்பத் திரும்பச் சுழன்று கொண்டேயிருந்தது.

மாலதியைப் பொறுத்தமட்டில் நான் ஒரு திட்டம் தீட்டிக்கொண்டேன். வேண்டுமென்றே அவள் என்னை வெறுத்து ஒதுக்கும்படி நடிக்க முடிவுசெய்தேன்.

அவள் என்னைத் தேடிவந்த போதெல்லாம் நான் ஓடி ஓடி விலகினேன். என்னுடைய மாற்றம் மாலதிக்குப் புரிந்தது. அவளாகப் பேசத் தொடங்கினுலும் நறுக்கென்று ஓரிரு வார்த்தைகளோடு நிறுத்திக்கொண்டு, என் பணிகளிலேயே கவனமாக இருப்பதுபோன்று பாவனை செய்வேன். நீர்த்துளிர்க்கும் விழிகளோடு அவள் திரும்பிச் சென்று விடுவாள்.

ஊர் இரண்டு பட்டால் கொண்டாட்டம் கூத்தாடிக்குத்தானே! தன் மொட்டைக் கடிதம் நன்ருக வேலை செய்வதாக மகிழ்ந்தான் பாலு. மாலதியை விட்டு நான் விலகிச் செல்வதைப் பயன் படுத்திக்கொண்டு அவளிடம் நெருங்க முற்பட்டான். அநாவசியமாய் அவளிடம் சென்று குழைந்து நெளிந்து பேசுவது.........இதுபோல் அவள் கவனத்தைக் கவர எல்லா வேலைகளையும் செய்தான் பாலு.

என்ன எண்ணினுளோ, மாலதியும் என்னை முறியடிக்கவென்றே

உறுதி கொண்டவள் போல, பாலுவுடன் அடிக்கடி பேசுவதும்—என் கண்முன், காதுபட அட்டகாசமாய் சிரித்துக் குலுங்குவதும்........ஓ! என்னைப் பழி வாங்குகிறாளோ? 'உன்னை விட்டால் எனக்கு வேறு எவருமே துணை இல்லை என்று நினைத்துக் கொண்டாயோ!' என்று என்னைச் சாடுவதுபோன்ற ஏகத்தாளம் அவள் பார்வையில் ததும்பி நின்றது!

'மாலதி! நீ என்னைப் பழிவாங்கவில்லை, பெண்ணே! அப்படி எண்ணி உன்னையே ஏய்த்துக் கொள்கிறாய், பேதைப் பெண்ணே! சூழ்ச்சியும், நயவஞ்சகமும் கொண்டவனின் நிழலை நீ விரும்புகிறாயே—விழித்துக்கொள் மாலதி, விழித்துக் கொள்!'

என் மனத்தின் புலம்பல்கள் அவளுக்குக் கேட்குமா?

தனிமையில் நான் ஏதேதோ நினைவுகளில் வெந்தேன். மாலதியை நான் ஏன் புறக்கணிக்கிறேன்?...... மொட்டைக்கடிதத்துக்கோ, பள்ளிப் பொறுப்பாளரின் எச்சரிக்கைக்கோ—நாலுபேர் நாலுவிதமாகப் பேசுவார்களே என்றோ அஞ்சி அல்ல; எனக்கே நான் பயப்படுகிறேன். என்னையே நம்பியிருக்கும் என் அன்பு மனைவி கல்யாணிக்கு எங்கே நான் துரோகமிழைத்து விடுவேனோ என்ற அச்சம்...அத்துடன் மாலதி என் காரணமாகப் பழி சுமக்கக் கூடாது என்ற நல்ல எண்ணத்தினால் தான் நான் ஒதுங்கி நிற்க முயல்கிறேன். மாலதியின் பாசத் துணையாக சிலகாலம் பழகிவந்த என்னைச் சுட்டு வீழ்த்தி அவளை அடைய நினைக்கிறான் பாலு; ஆனால் அவனை இறைவன் சுட்டு வீழ்த்தி விடுவான்...இது நிச்சயம்! நிச்சயம்!

ஏதேதோ கற்பனைகள்...தலையைக் குலுக்கிக் கொண்டேன்.

இரு நாட்களுக்குப் பின்—

கொள்ளிடம் 'ஓவர் பிரிட்ஜ்' அருகே தண்டவாளத்தின் மீது வெண்மையான சாக்பீஸ் எழுத்துக்கள் தெரிந்தன. நின்று அவைகளை வாசித்தேன்.

'வாத்தியார் பாலு—பெரிய டீச்சர் மாலதி கள்ளக் காதல்......'

நான் திகைத்துப்போய் நின்றேன், கீழே கொள்ளிடம் நதி சுழித்துக் கொண்டு ஓடியது. இத்தனைக் காலமாக மாலதியோடு நான் பழகிய போது இல்லாத ஒரு அவப்பெயர்—பாலுவோடு மாலதியைச் சம்பந்தப் படுத்தி......

அவளுடைய பெயருக்குக் களங்கம் சூழக் கூடாதே என்று அஞ்சித் தான் நான் விலகினேன். களங்கப் பெயர் இன்று வேறு ஒருவனால் அவளுக்குக் கிட்டி விட்டதைப் பார்த்து எனக்கு ரத்தம் துடித்தது. ஆளக்கூடிய நல்ல துணை ஒன்று கிட்டும்வரை அவள் தனிப்பறவையாக வாழவேண்டும்; சுதந்திரமாக இருக்கவேண்டும்! என்ன செய்யலாம்? மூளையைக் குழப்பிக்கொண்டு யோசித்தேன். முடிவு — கடிதம் ஒன்று எழுதி அன்றையத் தபாலிலேயே அனுப்பியும் வைத்தேன்.

மாலையில் பள்ளி முடிந்து நான் வீட்டுக்குத் திரும்பியபோது தண்டவாளப் பாதையில் சற்று தொலைவில் மாலதி சென்று கொண்டிருந்தாள். நான் சிந்தனையோடு அவளைத் தொடர்ந்து நடந்தேன். நான் நினைத்தது நடந்தது. 'பிரிட்ஜ்' வந்ததும் மாலதி நின்றாள். 'சாக்பீஸ்' சிறுக்கல் அவள் கண்ணில் பட்டுவிட்டது போலும்!

ஆத்திரத்துடன் அதை வெறித்துக் கொண்டிருந்து விட்டுப் பிறகு பக்கத்துச் சரிவில் இறங்கி, தன் கைக் குட்டையை ஆற்று நீரில் நனைத்து எடுத்து வந்தாள். வெண்மை எழுத்துக்களை அழிக்க அவள் முனைந்த அந்த நேரத்தில், அவள் அங்கிருப்பதைச் சற்றும் கவனியாதவன் போல அவளைக் கடந்து சென்றேன்.

அவள் தொண்டையினின்றும் விம்மல் வெடித்தது. துடைக்க எடுத்த கையை அப்படியே நிறுத்தி என்னையே அவள் வெறித்து நோக்குவதை உணர்ந்தேன் 'அவள் கண்களைத் துடைக்க அன்றொரு நாள் நான் கைக்குட்டையை நீட்டியது—கையை நான் இழுத்துக் கொண்ட போது அவள் என்னைக் கோழை என்று திட்டியது...பழைய நினைவுகள் எனக்குள் அலைமோதின.

நான் திரும்பவேயில்லை; வேகமாக நடந்து விட்டேன்.

* * *

மறுநாள் காலையில் மீண்டும் பள்ளிக்கு வருகையில் லேசான மழை. அந்த மழையில் சாக்பீஸ் கோடுகள் ஊறி, கண்ணுக்கு மறைந்திருந்தன. மாலையில் மீண்டும் வெயில் தலைகாட்டியபோது எழுத்துக்களும் பளிச்சிட்டன.

மாலதி கைக்குட்டையில் நீர் எடுத்து, கண்ணிலும் நீர் தெறிக்க வந்து பாலத்தில் குனிந்து அழிக்க முயன்றாள். எனக்குச் சிரிப்புதான் வந்தது. நேற்று போலவே நான் அவளைக் கவனியாமல் கடந்து சென்றபோது—

மாலதி கத்தினாள்; "நில்லுங்கள்!..."

நான் நின்றேன், திரும்பினேன். "உங்களுடன் நான் பேசவேண்டும்!" என்றாள் மாலதி.

"மன்னித்துக்கொள், மாலதி. சீக்கிரம் வீட்டுக்குப் போகவேண்டும்...கல்யாணி காத்திருப்பாள்!"—'நான் திருமணம் ஆனவன் எனக்காக அவள் காத்துக் கொண்டு இருப்பாள்' என்பதையும் நாசூக்காய் குத்திக் காட்டிவிட்டு நான் வேகமாக நடந்தேன்.

சரியாகப் பத்தே நாட்கள்!

அன்று போட்ட என் கடிதத்துக்குப் பதில் வந்தது. என் திட்டம் சரியாகப் பலனளித்திருக்கிறது. அதாவது—

பல காரணங்களைக் காட்டி, மாலதி என்ற ஒரு பெண் தலைமை ஆசிரியையாக இருப்பது இன்னொரு பெண்கள் பள்ளிக்கே தகும் என்பதைக் குறிப்பிட்டு மேலிடத்துக்கு எழுதியிருந்தேன். அதன்படி பக்கத்து நகரத்துப் பெண்கள் பள்ளிக்கூடத்துக்கு மாலதியை மாற்றியிருப்பதாகச் செய்தி கிடைத்துவிட்டது.

மாலதியின் கண்கள் அழுது சிவந்திருந்தன. தன் வலையில் சிக்கி வீழ்ந்து விடும் என்று எண்ணிய பறவை, வலையில் வீழுமுன்னரே பறந்து விடுகிறதே என்ற எதிர்பாராத அதிர்ச்சியில் பாலுவுக்கும் முகம் ஈயாடவில்லை.

அன்றுதான் மாலதிக்குப் பிரிவுபசார விழா; சிறு பார்ட்டி ஒன்றை அவளுக்குச் சக ஆசிரியர்கள் கொடுத்தார்கள். அந்தக் கடைசி நாளில் பிரிவை என்றென்றும் நினைவில் கொள்ள அவளுக்கு வாய்ப்பளிக்க நான் விரும்பவில்லை. மேலும் என்னிடம் விடைபெறும்போது மாலதி கதறி விடுவாளே...இந்தக் காரணங்களால் அன்று நான் பள்ளிக்கே செல்லவில்லை; விடுமுறை போட்டுவிட்டேன்.

* * *

புதுத் தலைமையாசிரியர் வரும் வரையில் நான்தான் தற்காலிகப் பதவியேற்கவேண்டும். பாலு என்னைக் குரோதம் ததும்பிய பார்வையால் சாடுவதை நிறுத்தவில்லை. யாருடைய நிழலிலும் மாலதி என்ற பறவைக்கு அவப்பெயர் கூடாதென்று அவளைப்பிரிந்து—என்னிடமிருந்து அவளைப் பிரித்து தனிப்

பறவையாக்கி விட்டேனேயொழிய எனக்கு அவள் நினைவு எப்போதும் இருந்தது; அவளுக்கும் அப்படித் தானே இருக்கும்!

மாலை மங்கிவரும் நேரம். நிதான மாக ஏரிக்கரைப் பக்கம் நடந்து கொண்டிருந்தேன். பாலு எதிர்ப் பட்டான்.

அருகில் சென்று முறுவலித்தேன். அவன் தோளில் கைவைத்து, "என் மேல் கோபமா, பாலு?" என்று கேட்டேன்.

அவன் பட்டென்று கேட்டான்; 'ராஜு! உண்மையைச் சொல்! மாலதியை 'டிரான்ஸ்பர்' செய்யு மாறு மேலிடத்துக்கு எழுதியவன் நீதானே?..."

"ஆம்!" என்று நான் நிதான மாகக் கூறினேன். அவன் ஆத்திரப் பட்டான். சிறிது நேரத்தில் அமைதியடைந்து பெருமூச்சும் விட்டான். மாந்தோப்புப் பக்கமாக பாலுவை அழைத்துச் சென்றேன்.

இருள் கவிந்து வந்தது. மரங்கள் மீதெல்லாம் திரை விரித்தாற் போன்று கருமை கப்பிக்கொண்டே வந்தது. "நாம் எங்கே போகிறோம்?..." என்று அவன் குழப்பத்தோடு கேட்டான். நான் பதில் கூறவேயில்லை.

வெகு தூரம் சென்றபிறகு மாந்தோப்பின் மையம்–மரங்கள் அடர்ந்த பகுதிக்கு வந்து சட்டென்று நின்றேன்.

'நண்பா! நான் ஒரு கதை சொல்கிறேன் ....கவனமாகக் கேட்கிறாயா?..." என்று நான் கூறினேன்

அவன் என்னை விசித்திரமாகப் பார்த்தான். இந்தப் பயங்கரமான பிரதேசம் தான் கதை கூறும் இடமா?...

நான் கதையை ஆரம்பித்தேன்.

"பாலு! வேட்டையாடச் சென்ற இரு நண்பர்களைப் பற்றிய கதை இது. நெட்டையும் குட்டையுமான இரு பேர்வழிகள் காட்டில் வெகு நேரம் வேட்டையாடிக் கடைசியில் ஒரு மரத்தின் அடியில் வந்து நின்றார்கள். அப்போது மாலை மங்கி இருள் பரவி வரும்நேரம். மேலே சென்றாலும் இருட்டு வந்துவிடும். வந்த வழியே திரும்பினாலும் இருள் சூழ்ந்துவிடும். அந்தச் சூழ்நிலையில் நெட்டையான ஆசாமியின் கண்களில் மரத்தில் ஒரு கிளையில் அமர்ந்திருந்த பறவை ஒன்று மங்கலான ஒளியில் தெரிந்தது. அவன் தன் குள்ள நண்பனுக்கு அப்பறவையைச் சுட்டிக்காட்டினான். 'நண்பா! தனியே அச்சமின்றி இருளை அது வரவேற்கும் அழகினைப் பார்த்தாயா?..." என்று அவன் கூறினான். ரசிப்பதோடு நிற்கும் மனோபாவம் படைத்தவனல்ல குட்டைப்பேர்வழி. நண்பன் எவ்வளவு கூறியும் கேளாமல் துப்பாக்கியை உயர்த்தினான். அதே சமயம் வேறு ஒரு பறவை அந்தக் கிளையில் வந்து உட்கார்ந்து முன் பறவையோடு குலவியது. நெட்டை நண்பன் கூறினான்; "இணைகளில் ஒன்றைக் கொல்ல நினைத்தாயே—பாவம்! நாம் செல்லலாம் வா, நண்பா!" இப்படி அவன் கூறிக்கொண்டிருக்கும்போதே குள்ளன் அந்தப் பாதகமான செயலைப் புரிந்துவிட்டான். இரு பறவைகளில் ஒன்று துடிதுடித்துக் கீழே விழுந்தது. இணையைப் பிரிந்த பறவை சிறகடித்துப் பறந்து இன்னொரு கிளையில் போய் அமர்ந்து 'கீச்...கீச்' சென்று சோகக் குரல் கொடுக்கத் தொடங்கியது. நெட்டையன் ஆத்திரத்தால் கொதித்தான். தனிப்பறவையையும் நண்பன் எங்கே வீழ்த்தி விடுவானோ என்ற அச்சத்தில்—தவிப்பில் — துடிப்பில் எடுத்தான் தன் துப்பாக்கியை 'டுமீல்...டுமீல்' என்று தன்னுடைய நண்பனையே சுட்டு விட்டான். "பறவையே நீ இனி தனிப்பறவை. இனியொரு நல்ல துணை கிடைக்கும் வரை யார் கண்ணிலும் படாமல் தனியாகவே இரு. உன் துணையையும் கொன்று உன்னையும் சூறையாட எண்ணிய இவனை நான், உன்னிடமிருந்தும் இந்த உலகிடமிருந்தும் பிரித்து விட்டேன்–சுட்டு வீழ்த்திவிட்டேன்! உன் வாழ்வில் இணையைப் பிரிந்த இருள் சூழ்ந்து விட்டது. இதோ, திரும்பி நடந்து கொண்டிருக்கிறேனே — எனக்கும் இருள் வந்துவிட்டது!...' என்று அந்த நெட்டை மனிதன் அந்தக் காட்டின் இருளில் தட்டுத் தடுமாறி வந்த வழியே நடந்து கொண்டிருந்தான்......

நான் கதை சொல்வதை நிறுத்தினேன். பாலு என்னையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். நானும் பேசவில்லை. அவனும் வாயைத் திறக்கவில்லை. பிறகு—

"நான் வருகிறேன் ராஜு......!" என்று பலகீனமாய் கூறிவிட்டு தள்ளாடியபடியே நடந்து சென்றான்.

நான் கூறியது உண்மையில் கதையே அல்ல—மாலதி என்னும் பறவையைச் சுற்றி நடந்தவைகளையும், என்னைப் பிரிந்து அவளும், அவளைப் பிரிந்து நானும் இருளில் மூழ்கிக் கிடப்பதையுமே நான் உருவகித்துக்கூறினேன் என்று அவனுக்குப் புரிந்திருக்காதா என்ன?

★

8-ம பக்கத் தொடர்ச்சி

பல வரலாற்று உண்மைகளைச் சொல்லிக்கொண்டு போகலாமே."

"நீங்கள் நிரம்பப் படித்திருக்கிறீர்கள்."

"பிரச்சினையை இவ்வளவு எளிதில் முடித்துவிட்டீர்களே. உங்களோடு — உங்கள் வேலையோடு தொடர்புடைய படிப்பை நீங்கள் படிக்கக்கூடாதா? இருக்கின்ற தொழிலிலேயே ஆசிரியத் தொழிலுக்குத்தான் ஓய்வு அதிகம் என்கிறார்கள். அதில் ஒரு பகுதியை நீங்கள் இதற்குச் செலவழிக்கக் கூடாதா? ஓய்வு (Rest) நீங்கள் விரும்பக்கூடியதாய் இருக்கலாம். ஆனால் ஒழிவு (Leisure) நேரம் இருக்கிறதே அதைப் பயன் படுத்தினாலும் போதுமே. உங்களை மிகச் சிறந்த ஆசிரியராய் மாணவர் மதிக்கும்படி ஆக்கிக் கொள்ளலாமே.

"உண்மைதான்"

இதற்குள் பேருந்து அய்யன்பேட்டையை நெருங்கிக் கொண்டிருந்தது. நான் மெல்ல,

"ஊர் நெருங்கிவிட்டது. நீங்கள் பொறுமையிழக்கிற மாதிரி நான் பேசிக்கொண்டிருந்தேன் போலிருக்கிறது மன்னிக்கவும்" என்றேன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. எங்களுக்கு எவ்வளவோ தெரிந்து கொள்ள முடிந்தது. எங்கள் பணியில் ஒரு புதிய ஊக்கத்தையும் தந்து விட்டீர்கள். உங்களுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். அடுத்த முறை மாணவரை அழைத்துச்செல்லும்போது நீங்கள் சொன்ன வழியையே பின்பற்றி வருகிறோம்."

"நன்றி, நான் வருகிறேன்."

நான் இறங்கிவிட்டேன். வண்டி நிலையத்துக்குப் போய்க் கொண்டிருந்தது. எதிர்காலத்தைச் சமைக்கிற சிறப்புமிக்க ஆசிரியப் பணியின் புனிதத் தன்மையை மறந்து, வெறுமையாய்ச் சம்பளம் வாங்குகிற கடனுக்காக, வேலை செய்யும் அந்த ஆசிரியர்களைப் பற்றி மனத்துக்குள் நொந்துகொண்டே நான் நடந்து சென்றேன்.

—நன்றி! "மன்றம்."

சே. தருசு, பருவணர்தல்.

வாளுெலியில் "ஆல் இண்டியன் ரேடியோ" என்று கூறிவிட்டு, "மதருஸ் வானெலி நிலயம்" என்கிருர்கள். 'ஆகாஷ்வாணி' என்ற இந்தியை ஒழித்துவிட்ட போது, 'மதருஸ்' என்பதையும் "சென்னே" என்ருல் என்ன?

வீம்புக்காக மொட்டையடிப்பது என்பார்கள் இல்லையா, அதே கதைதான் வானெலி நிலயங்களின் கதையும் சுயமாக அவைகளினுல் இயங்கவும் முடியாது. சொல்வதைக் கேட்டு நடக்கவும் துணிவிருக்காது. எஜமானனின் கோபப் பார்வை என்னசெய்துவிடுமோ என்றஅச்சம் ஒருபக்கம்; தனித் தமிழுக்குத் தகுதியா? என்ற பெருமூச்சு ஒருபக்கம்! பொதுவாகவே, வானெலி நிலயம் என்பது "இருதலைக்கொள்ளி" நிலயில் இருக்கிறது. நிர்வகிப்பது அரசு; வானெலியை சுவைப்பது மக்கள். அரசு தன் இலட்சியப் போக்கில் செயலாற்றும்; மக்கள் தங்கள் வேட்கை வழி விரும்புவர். இதற்கெல்லாம் முடிவிருக்கும் என்று நம்பமுடியுமா?

இராம. வேதநாயகம், வடமாதிமங்கலம்.

மனிதனுக்குத் திருமணம் அவசியந்தானு?

மனித சமுதாயம் ஒரு ஒழுங்கு நியதிக்கு உட்பட்ட அமைப்பாக, கட்டுப்பாடுள்ள ஒரு குழுவாக இயங்கவேண்டும்; அப்படி இயங்குவதுதான் நாகரிகம்; அறிவு முதிர்ச்சியடைந்திருக்கிறது என்பதற்குரிய எடுத்துக்காட்டாக இதனைக் கருதமுடியும். திருமணம், மனிதனை இந்த வழியில் வழி நடக்க உதவுமானுல், அது அவசியம்தான். மனிதகுலத்துக்குவரையறைக்குட்பட்டசில நியதிகளும், கட்டுப்பாடுகளும் தேவையில்லை என்று நினைப்பவர்கள்- நெல்லிக்காய் மூட்டைகளாய், சந்திரத்து இருக்கையராய் இருப்பதைக் கண்டிக்க முடியாது.

முகையூர் இடைத் தேர்தலில், தோல்வியுற்ற திருக்குறள் முனுசாமி தி. மு. கவின் பிரசாரத்தில் தில்லுமுல்லுகள் நடந்திருக்கின்றன என்கிருரே, சரியா?

இந்தத் தடவை, திருக்குறள் முனுசாமி அவர்களது பிரசாரமே 'தில்லுமுல்லு'கள் நிரம்பிய தாகத்தானே இருந்தது! காங்கிரஸ் வேட்பாளராகி விட்டபின்பு, அவரிடம் தரமான பேச்சுக்களை எதிர்பார்க்கலாமா?

?! வினா-விடை

புலவர் மணிமுடிச் சோழன், சென்னே.

பம்பாயில் கூடிய நிஜலிங்கப்பா காங்கிரஸ், உருப்படியான எதையாவது செய்திருக்கிறதா?

அவர்களே 'உருப்பட' முடியாமல்தானே இந்த நிலைக்கு வந்திருக்கிருர்கள்! அவர்களால் எப்படி 'உருப்படியான' வழி காட்ட முடியும்?

எம். ஆறுமுகம், விளாகம்.

முகையூர் வெற்றிக்குக் காரணம் முழுக்க முழுக்க கலைஞர் கருணநிதி அவர்கள்தான் என்கிறேன் நீங்கள்?

இதை மறுக்க வேண்டிய அவசியம் யாருக்கும் இல்லையே!

ராமகிருஷ்ணு, பெங்களூர்.

கல்கத்தாவில் பாங்குக் கொள்ளைகள், மலிவாகி விட்டனவே, ஏன்?

பாங்குகளில்தானே ஐயா, "சுரண்டுவோரின்" சேமிப்புக்கள் குவிந்து கிடக்கின்றன. இடதுசாரிகளின் பிடியில் இருக்கும் மே. வங்கம், இலட்சியப் போராட்டங்களை நடத்துகின்றது; இதனையெல்லாம் 'கொள்ளை'யென்று கூறலாமா?

எஸ். சுந்தரராசன் சென்னே.

மருத்துவக் கல்விக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை மிகுவது எதனுல் என்று கூற முடியுமா?

மருத்துவத்திற்காக மக்கள் செலவிட வேண்டியிருக்கும் தொகையைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, டாக்டராகி விடுவதால் மிகுந்த வருவாய் கிடைக்கும் என்ற எண்ணம் இயல்பாகவே ஏற்பட்டு விடுகிறது. நோயாளிகளின் பெருக்கத்திற்கான காரணங்களை டாக்டர்களிடம் கேட்டால், நோய்கள் புதிய புதிய வடிவில் பெருகிக் கொண்டிருக்கின்றனவென்றும், இந்த அளவுக்கு நோய்கள் மலிய, மக்களது உணவு, தரங் கெட்டு இருப்பதுதான் என்றும் கூறுகிருர்கள். உணவுப் பொருள் தரங் கெட்டிருப்பது ஒழுங்குபடுத்தப்பட்டால், பல பிரச்னைகள் தீரும்.

என். ராமச்சந்திரன், ஒரிசா.

டெல்லி மக்களவையில், உறுப்பினர்களிடையே கைகலப்பு ஏற்பட்டது பற்றித் தங்கள் கருத்தைக் கூறுவீர்களா?

இடதுசாரி கம்யூனிஸ்டுகளுக்கும், பி. சோ. இ. சோ. உறுப்பினர்களுக்கும் இடையே ஏற்பட்ட அடிதடி பற்றித்தானே கேட்கிறீர்கள்! நாடாளு மன்றத்தில் இனி, இவை போன்றவைகள் அன்றாட நடவடிக்கையாகவே இருக்கக் கூடும். இந்திரா காந்தி, நாடாளுமன்றத்தைக் கலைத்து விடலாம் என்று குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரைக்கும் வரைவில் இவை நடைபெற்றுக் கொண்டேதானிருக்கும். ஏன் தெரியுமா? இந்திரா அரசுக்கு எதிரான போர்க் குழுறலை, சிண்டிகேட் காங்கிரஸ் ஊக்கப்படுத்தத் தொடங்கி இருப்பதுதான்.

★

முகப்பில்:

முகையூர் தொகுதியில்
வெற்றிபெற்ற திருமதி
பத்மாவதி கோவிந்தசாமி
அம்மையார் அவர்கள்
23—12—69ல் பதவிப்பிரமாணம்
எடுத்துக்கொண்டார்கள்,

குறையும்-நிறையும்

காஞ்சியில் இந்தப் பகுதி, கிழமை தோறும் தொடர்ந்து வெளிவரும். மிகுதிக்கண் இடித்தல் என்ற குறட்பா இயல்புப்படி இவற்றைப் பிரசுரிக்கிறோம். கடிதங்கள், சுருக்கமாக, தெளிவாக, காகிதத்தின் ஒரே பக்கத்தில் முழு முகவரியுடன் எழுதப்பட வேண்டும், கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

"குறையும் நிறையும்" பகுதி
"காஞ்சி"
86, திருக்கச்சிநம்பித் தெரு,
காஞ்சிபுரம்-8.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

தமிழ் நாட்டிலுள்ள அரசு ஊழியர்களுக்கு முன்னாள் அரசு ஆண்டுக்கு ஒருமுறை தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ் போன்ற விழாக்களைக் கொண்டாட, அந்தந்த மதத்தைச் சார்ந்தவர்களுக்கு வட்டியில்லாத கடனாக உதவித் தொகை வழங்கி வந்தது. இன்றைய கழக அரசு எம்மதத்தைச் சார்ந்தவர்களும் எந்த விழாவிற்கும் 'கடன்' பெற்றுக் கொள்ளலாம் என்று திருத்தியிருக்கிறது, இது வரவேற்கத்தக்கது. ஆனால் மதச்சார்பற்ற ஊழியர்கள் ஏதாவது ஒரு மதவிழாவைக் காட்டித்தான் அந்தக் கடன் தொகையைப் பெற வேண்டியிருக்கிறது. அல்லது பணத்தைப் பெறுமலேயே இழக்கவேண்டியிருக்கிறது. இது அரசின் மதச்சார்பற்ற தன்மைக்கு முரணானது எனக் கருதுகிறேன். ஆகவே மதச்சார்பற்ற ஊழியர்களும் 'கடன் பண உதவி' பெறுகிற வகையில் விதியை இன்னும் சிறிது திருத்தவேண்டும் எனக் கழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். தவிர அரசு ஊழியர்களுக்கு தற்செயல் விடுப்பு 12 நாட்களும் விரும்பு மதவிழா விடுப்பு 3 நாட்களும் என்று இருக்கிறது. இதிலும் மதச்சார்பற்றவர்கள் 'ஏதோ' மதவிழா கொண்டாடுவதாகப் பொய்க் கூறித்தான் அந்த மூன்று நாட்களையும் விடுப்பு எடுக்க வேண்டியிருக்கிறது. அப்படி மதச்சார்பற்றவர்கள் பொய் சொல்வதைத் தடுக்க மீண்டும் அரசு ஊழியர்களுக்கு சில்லறை விடுப்பு 15 (பதினைந்து) நாட்கள் என்று அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுகிறேன். முதலில் சொன்ன திருத்தமும், இரண்டாவது குறிப்பிட்ட ஆணையும் 'தமிழ்நாடு' அரசு பிறப்பித்தால் மதச்சார்பற்ற அரசு ஊழியர்கள் 'பொய்' சொல்லாது அரசு அளிக்கும் வசதிகளைப் பெற முடியும். இல்லையேல் பொய் சொல்லித்தான் பெறவேண்டியிருக்கும். அரசு எதை விரும்புகிறது?

என், நல்லையா,
செங்கோட்டை.

* * *

அன்புமிகு ஆசிரியர் அவர்களுக்கு!

வணக்கம். ஜூனியர் கிரேடு, சீனியர் கிரேடு ஆசிரியர்ப் பயிற்சி முடித்துவிட்டு ஆயிரக்கணக்கான ஆசிரியத் தோழர்கள் வேலையின்றி இருக்கின்றோம்! ஆசிரியத் தொழிலை நம்பித்தான் அனைவரும் பயிற்சியில் ஈடுபட்டோம்! என்னைப் போன்ற சிலர் விருதுநகர் காவல் நிலையங்களில் பணிபுரிந்து வருகின்றனர். "ஊமைக்கு உளறுவாயன் மேல்" என் தற்கேற்ப எங்களை நாங்களே திருப்தி செய்துகொள்ளுகிறோம்! ஆனால் ஊமையாகவே இருப்பதுபோல், வேலையே இல்லாமல் அலையும் ஆசிரிய அன்பர்கள் அடையும் துன்பங்கள் எண்ணிலடங்கா! அவை சொல்லில் அடங்கா! இந்த நிலை இருப்பினும் ஆண்டுதோறும் தமிழக ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளினின்றும் ஆயிரக்கணக்கான மாணவாசிரியர்கள் பயிற்சி முடித்து வெளிவந்துகொண்டுதான் இருக்கின்றனர் திண்டாடிக் கொண்டுதான் இருக்கின்றனர்! சில ஆண்டுகளுக்கேனும் இந்தப் பயிற்சியை நிறுத்திவைக்கலாம் இந்த நிலை மாறுமா? இனிய வாழ்வு கிட்டுமா? அரசு இதைக் கவனித்து ஆவன செய்யும் என எண்ணி இதைத் தங்களுக்கு அனுப்பி வைக்கின்றோம்!

இராம. வேதநாயகன்,
வடமாதிமங்கலம்.

* * *

அன்புள்ள ஆசிரியருக்கு,

தமிழக அரசு சுகாதார இலாகா பிரிவைச்சார்ந்த மலேரியா ஒழிப்பு கீழ் பணிபுரியும் சிறந்த ஊழியர்களின் நிலைமை மிக மிக அனுதாபப்படக் கூடிய நிலையில் இருக்கிறது. எங்கள் ஊரில் குத்தம்பாக்கம் ஒரு N. M. E. P. ஊழியர் ஒருவர் கடந்த நான்கு ஆண்டுகளாக பணியாற்றி வந்தார் எங்கள் ஊரில் மட்டுமல்லாமல் அவருக்கு பணிக்கப்பட்டுள்ள மற்ற ஊர்களிலும். கடமையுடன் பணியாற்றியதை அந்தந்த ஊர் மக்களே ஒப்புக்கொள்வார்கள் எங்கள் ஊர் பொறுத்தவரையில் மலேரியா ஒழிப்பு ஊழியர்களில் அவரைப்போல் அதற்கு முன் ஊழியர்கள் ஊக்கமுடன் பணியாற்றியதில்லை என்பதை ஒப்புக்கொள்வோம். ஆங்காங்கு வேலை செய்த ஊழியர்கள் ஒன்று சேர்ந்து அவர்களின் குறைகளை தெரிவிக்க ஒரு சங்கம் அமைத்துக்கொள்ள முயற்சி செய்தார்கள். எங்கள் ஊரில் இருந்தவரும் பங்குகொண்டு ஒத்துழைத்தார் இந்த ஒரு காரணத்திற்காக அவர் மீது லஞ்சம் வாங்கும் ரீதியில் மேலதிகாரிகள் கொஞ்சமும் ஆதாரமில்லாத காரணம் காட்டி வேலையில் இருந்து நீக்கியிருக்கிறார்கள் பணியில் கடமை தவறியதில்லை மேலதிகாரிகளுக்கு கீழ்ப்படியாமல் நடந்ததில்லை அப்படியிருந்தும் ஒரு ஊழியருக்கு இந்த கதி என்றால் என்ன நீதி இருக்கிறது இதை அரசாங்கம் கவனத்திற்கு கொண்டு வந்து பரிசீலிக்குமா அந்த ஊழியருக்கு நிவாரணம் கிடைக்குமா! அரசாங்கம் தக்க பரிசீலனை செய்யும் என நம்புகிறோம்.

டி. மாதவன்,
பா. ஜெயராமன்
கே. எம். ஏழுமலை
குத்தம்பாக்கம்.

* * *

ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

ஐயா, சென்னை மாநகராட்சிக் கல்விப் பிரிவில் நடக்கும் ஒரு ஊழல் பற்றி எடுத்துக்காட்ட விரும்புகிறேன். கோஆர் அரசாங்கப் பள்ளியில் தலைமை ஆசிரியையாக வேலை பார்த்து வந்த ஆசிரியை ஒருவர் சுமார் ரூ 1000க்கும் மேற்பட்ட தொகையைகையாடல்செய்துவிட்டு இப்போது சென்னை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் வேலை பார்த்து வருகிறார். நிர்வாகத்தை ஏமாற்றி வேலையில் சேர்ந்த அம்மையாரை இன்னும் வேலையில் நீடிக்கச்செய்து வருகிறது நிர்வாகம். பணக்கையாடல் ஏமாற்றல், முதலிய குற்றங்களைச் செய்த ஆசிரியையின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பது விந்தையாக இருக்கிறது மக்களின் வரிப்பணம் இப்படித்தான் விரயமாகிறது. இதுபோல ஊதாரித்தனமாக இயங்குகின்ற நிர்வாகம் சீர்படுமா? கமிஷனர் நடவடிக்கை எடுப்பாரா? அரசு இப்படிப்பட்ட ஊழல்களைப் போக்க முன்வருமா?

கே. ராஜாராமன்
கோஆர்.

கேட்டீரா சேதி!

சிண்டிகேட் சோஷலிசம்!

சோஷலிசம், சோஷலிசம் என்று வெறும் வரட்டுக் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தால் போதுமா? செயல் பூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்க வேண்டாமா? இந்திராவின் காங்கிரஸ் இந்த விஷயத்தில் வாய் வேதாந்தம் மட்டுமே பேசிக்கொண்டிருக்கிறது என்றெல்லாம் குற்றம் சுமத்திக் கொண்டிருக்கிற சிண்டிகேடர்கள், பம்பாயில் கூடி மாநாடு முடிந்து திரும்பும் வழியில், உண்மையிலேயே சோஷலிசத் திட்டத்தைச் செயல்படுத்தும் வீரதீரங்களில் ஈடுபட்டார்கள்; வெற்றியுங் கண்டார்கள் என்றொரு செய்தி வந்திருக்கிறது. திரும்பும் போது. பிரதிநிதிகளுக்காக வென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தனி ரயில், சாப்பாட்டுநேரத்துக்கு ஜபல்பூர் இரயில் நிலையத்தில் வந்து நின்றது! சோஷலிஸ்டுகள் எல்லோரும் இரயிலிலிருந்து இறங்கி, இரயில் நிலைய உணவு விடுதிக்குச் சென்றார்கள். வயிறு புடைக்கத் தின்றார்கள். இவை மட்டுமே முழுமையான சோஷலிசம் என்று அவர்களால் முடிவுக்கு வர முடியவில்லை; உணவு பரிமாறப் பயன்படுத்தப்பட்ட எவர் சில்வர் பாத்திரங்களையும் தேவையானவர்கள், தேவையான அளவுக்கு எடுத்துக் கொண்டார்கள்! ஒரே ஒரு கோஷம்! 'நிஜலிங்கப்பா வாழ்க!' என்று. வண்டியில் வந்து ஏறிக்கொண்டு விட்டார்கள். உணவுக்குரிய பணம் கொடுக்கப்படவில்லை, இது குறித்துப் போலீஸ் வழக்கொன்றும் பதிவாகி இருக்கிறது. எப்படி இருக்கிறது சோஷலிச வாதிகளின் சோஷலிச நடவடிக்கைகள்!

இதுவும் ஒரு கட்டளைதான்!

மனிதர்களுக்குக் கருணைகாட்ட வேண்டிய கடவுள்களுக்கு, மனிதனே கருணை காட்டிக் காப்பாற்ற வேண்டிய பரிதாபகரமான நிலையேற்பட்டிருக்கிறது தமிழ்நாட்டில். கோயில்களில் மூலஸ்தானம் வரையில் அனைவரும் செல்ல அனுமதிக்கப் படவேண்டும் என்று ஒரு போராட்டம் நடத்தவிருப்பதாக பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் சொல்லிக்கொண்டே வருகிறார்கள். இதில் நியாயமுமிருக்கிறது. இந்த நியாயத்தை உணர்ந்துதான், குன்றக்குடி மடாதிபதி, தன் ஆதிக்கத்தின் கீழ் உள்ள எல்லா கோவில்களிலும், எவரும் மூலஸ்தானம் வரை போய், வழிபாடு நடத்தலாம் என்று செய்தி கொடுத்திருந்தார் அண்மையில். பாவம்! கடவுளைப் படைதவர்களுக்கு இந்தப் பொதுமைக்கு பொறுக்குமோ! நீதி மன்றம் என்று ஒன்று இருக்கிறது. நீதியை மட்டும்வழங்கிக் கொண்டு! அங்கேபோய், கிருஷ்ணசாமிஐயர் என்பவர், மாயாண்டி மதிவாணன் என்பவர்களையும் துணைசேர்த்துக் கொண்டு, சேஷாத்திரி என்ற ஐயங்காராகிய வழக்குரைஞரின் மூலம், வழக்கொன்றையும் பதிவு செய்தார்களாம். சட்டம், அதை எப்படியும் வளைக்கமுடியும் என்று கூறப்படுதே நீதிகூறப்பட்டதாம், யாரும், மூலஸ்தானத்துக்குச் செல்லக்கூடாது என்று! இது தமிழ்நாடு! நீதிமன்றக் கட்டளைக்குக் கீழ்ப்படிவது மக்கள் கடமை! கேட்கத்தான் வேண்டும்!!!

நிலைமை இருக்கிறதாம்!

தேர்தல் நேரத்தில் சில கட்சிகள் கூட்டுச்சேர்ந்து, எதிர்ப்புக்களைக் குறைத்துக்கொள்ளவும், வாக்குகள் சிதறாமல் இருக்கவுமான நிலைமைகளைத் தோற்றுவித்துக்கொண்ட போது, காங்கிரஸ்காரர்கள் பரிதாபகரமான முறையில் பேசத்தொடங்கினார்கள். கூட்டுச்சேர்வது ஜனநாயக முறைகூட அல்ல என்று தமிழ் நாட்டு மேதைகூட ஒருமுறை கூப்பாடு போட்டார். அப்போதெல்லாம் அந்தக் காங்கிரசுக்காரர்கள் கனவுகூட காணவில்லை, தங்கள் தலையெழுத்து இப்படி கேவலமாக ஆகும் என்று! காங்கிரசுக்கட்சி பிளவுண்ட பிறகு, பம்பாயில் கூடியவர்களுக்கு தேர்தலைப்பற்றிய நினைவு கூட வந்திருக்கிறது என்று தெரிகிறது. பரீதாபத்தில் காங்கிரஸ் கூடியபோது இருந்த நம்பிக்கை, அகமதாபாத்தில் இல்லை என்பதால், தனித்துப் போட்டியிடுவது என்ற பரீதாபாத் தீர்மானம், மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று இப்போது நிஜலிங்கப்பா கூறி இருக்கிறார். இதுமட்டுமல்ல— தேர்தலில் பிறகட்சிகளுடன் கூட்டுச் சேருவது பற்றியும் யோசிக்கப் படும் என்றுவேறு தெரிவித்திருக்கிறார். சேரமாட்டார்கள் என்று சொல்லமாட்டார்களாம்! நிலைமை அப்படி இருக்கிறதாம்! சேதிகூட அப்படித்தான இருக்கிறது! அரசியல் என்றாலே இப்படித்தானே!

மன்னிக்கவேண்டுகிறேன்!

சென்ற கிழமை நாடாளுமன்றத்தில் இடது கம்யூனிட்டு உறுப்பினர் ஒருவருக்கும் பி. சோ. கட்சி உறுப்பினருக்கும இடையே, மன்றத்திலேயே நடைபெற்ற கைகலப்பு குறித்து பி. சோ. தலைவர் கோரே, மன்னிப்புக் கேட்டு அறிக்கையொன்று வெளியிட்டிருக்கிறார். "என்னுடைய கட்சி உறுப்பினர் ஒருவர் முறைகேடாக நடந்துகொண்டு விட்டது பற்றி நான் அவைத் தலைவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியது என் கடமையாகும்! மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு உறுப்பினர் என்னதான் கோபமூட்டும வகையில் நடந்துகொண்டிருந்தாலும், கூட அவருடன் கட்சி உறுப்பினர் அடிதடியில் ஈடுபட்டிருக்கக்கூடாது; மதிப்பு மிக்க மனறத்தின் கண்ணியத்தைக் காக்கும் முறையிலாவது அவர் நடந்துகொண்டிருக்கவேண்டும்" என்று தெரிவித்திருக்கிறார்! அடுத்து மார்க்சிஸ்டு கட்சி! அதுவும இது போல் மன்னிப்புக் கேட்டுக்கொண்டால் விரும்பத்தக்கதாக இருக்கும்! கம்யூனிஸ்டுகளாவது மன்னிப்புக் கேட்பதாவது என்கிறீர்களா? மறுக்கமுடியாதே எம்மால்!

★

அன்னை

நான் இப்போதுள்ள நிலைமைக்கும், இனி அடைய நம்பிக கொண்டிருப்பதற்கும், நான்என தெய்விகத் தாய்க்கே கடமைப்பட்டிருக்கிறேன்.

—ஆபிரகாம லிங்கன்.

"பிரான்ஸ் நல்ல தாய்மார்களைப் பெற்றிருந்தால், அவள் நல்ல பிள்ளைகளையும் அடைவாள்.

—நெப்போலியன்.

தாயின் நற்குணங்களும், தந்தையின் பாவங்களும் குழந்தைக்குவந்து சேரும் என்று எங்காவது எழுதி வைத்தால் நலம். —டிக்கன்ஸ்.

காஞ்சி 28—12—69 Regd. No. M. 8326

காஞ்சி

பொங்கல் மலரில்

சுவைமிகு கனிகளென

17.1.70

அமைச்சர்கள்,

முன்னணித் தலைவர்கள்,

முற்போக்கு எழுத்தாளர்கள்

படைக்கும் எழுத்தோவியங்களுடன்

கதை

கவிதை

கட்டுரை

துணுக்குகள்

முதலியவைகளும்,

அறிஞர் அண்ணா அவர்களின்

"இன்ப ஒளி"

முழுக் கதையும் சுவை சேர்க்கிறது!

இன்றே விண்ணப்பிக்கவும்!

விலை 1 ரூ 50

ஆசிரியர், வெளியிடுபவர், சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-2
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.